350

1158

[AP]PROVED BY THE TEXT-BOOK COMMITTEE, MADRAS

பாலர் தமிழ் வாசகம்

ஐந்தாம் புத்தகம்

OFFICE ... 11 OCT 1936 ... MADRAS

V. S. VENKATARAMAN & Co.,
Educational
Publishers.
KUMBAKONAM



பாலர் தமிழ் வாசகம்

ஐந்தாம் புத்தகம்

OFFICE OF THE REGISTRAR ... 10 OCT 1936 MADRAS

பதிப்பாசிரியர் :
திருவாளர் அ. கந்தசாமிப் பிள்ளை,
தமிழ் விரிவுரையாளர்,
துரைத்தன மகமதியர் காலேஜ், சென்னை.

1205 4748186

Approved by the Text-Book Committee, Madras, for class use
(*Vide page 146 of the consolidated list published in the Fort St. George Gazette, dated 2-6-1936*)

V. S. வெங்கடராமன் கம்பெனி,
பப்ளிஷர்ஸ் : : கும்பகோணம்.

பதிப்புரிமை] [விலை அணா 6

Reprinted—1936.

PRINTED AT
THE ROYAL PRINTING WORKS
MOUNT ROAD : : MADRAS.

PUBLISHERS' NOTE

OFFICE OF THE ... BOOKS
10 OCT 1936

This series of Balar Tamil Readers embody a new method in which nursery rhymes, nursery stories and cradle songs are made the main vehicle for reading, writing and conversation which are the three-fold aim of the study of the mother tongue in the lower classes. In following this psychological and active method, children's experiences at home, in school and in their immediate neighbourhood are the principal topics dealt with in the Readers of this series, and the vocabulary also is so selected that the words used are already familiar to the children, with the result that difficult words which are not within the ken of little boys and girls, which require elaborate explanation and which in consequence retard progress and fluency in reading are avoided with special care. Thus reading and writing are made easy and pleasant, and greater progress is made possible in each class. Another feature of these readers is that more of children's stories, dialogues and conversations are introduced which the pupils can act, and so develop a correct speech-feeling.

So far as the teaching of the mother tongue is concerned, elementary education up to Standard V may be said to comprise of three distinct stages. In Standard I the children are to be helped to identify the letters of the alphabet which are familiarised through pictures, simple words and short sentences. In Standards II and III which mark the second or the transition stage, the main aim is to help the pupils to surmount the mechanical difficulties in reading, writing and conversing so as to gain fluency. To facilitate this purpose it is a sound principle that words of high frequency alone should first be introduced, and this is well kept in view in

these readers. To read as well as to write easy letters of communication is also one of the aims at this stage, and so practice in letter-writing is given copiously in this series.

When the pupils come to the third stage which covers Standards IV and V, they have attained a certain amount of fluency and mastery in reading and writing and they have now a wider outlook as their mental powers have developed further. Hence in these higher classes, the lessons and the vocabulary can go beyond the pupils' immediate experience. It is, therefore, possible at this stage to include topics exten ding beyond their home-lands to national and inter-national interests. Thus, Readers IV and V in this series are prepared so as to pave the way for creating a reading habit in the pupils so that when they grow up, they may read a vernacular daily, follow world events, and exercise their franchise properly which is defined by the Hartog Committee as the main purpose of elementary education.

This series of Tamil Readers thus stand for certain new principles and methods. It is hoped that these merits will commend themselves to the Headmasters and Managers of schools, and that these books will be widely introduced in their institutions.

We take this opportunity of tendering our sincere thanks to M. R. Ry. A. Kandaswami Pillai Avl., Lecturer in Tamil, Govt. Muhammadan College, Madras, for the great help he has rendered us in bringing out this series of Readers, and for being their editor.

V. S. VENKATARAMAN & CO.,
PUBLISHERS, KUMBAKONAM

பொருளடக்கம்

பாடம்	விஷயம்	பக்கம்
1.	நமது தேசம்	1
2.	எங்கள் நாடு (பாட்டு)	5
3.	வேடனும் புருக்களும்	6
4.	யானை	11
5.	யானைக்கும் பானைக்கும் சரி	16
6.	பொருட்காட்சி	19
7.	எறும்பும் புருவும்	26
8.	வெள்ளத்தில் உதவிய வீரன்	27
9.	வியாபாரம்	30
10.	கடன் சீட்டு	34
11.	உலகச் சிறுவர்கள்	35
12.	கடவுளின் மாண்பு (பாட்டு)	42
13.	டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் ...	43
14.	இரத்தினங்கள்	48
15.	சக்கரவர்த்தியும் கடைக்காரியும் ...	52
16.	கடிதம்	57
17.	தேக்கு மரம்	60
18.	அலாவுதீனும் அதிசய விளக்கும் ...	63

பாடம்	விஷயம்	பக்கம்
19.	தினசரிப் பத்திரிகை	... 71
20.	அதிவீர ராம பாண்டியர் ...	... 75
21.	காகமும் பாம்பும் (பாட்டு) ...	... 80
22.	மேட்டூர் அணை ...	... 82
23.	உலகச் சாரணத் தலைவர் பேடன் பவல் பிரபு	... 88
24.	கண்ணாடியின் சுய சரிதை ...	... 92
25.	அழகுக் கலைகள் ...	... 96
26.	மௌன வாசிப்பு ...	... 100
27.	அரசாளப் பிறந்த ஜயசந்திரன்	... 102
	வாக்குண்டாம் ...	... 114
	விவேக சிந்தாமணி ...	... 119
	தனிப் பாடல்கள் ...	... 120

மஹாமஹோபத்தியாய டாக்டர், உ. வே. சாமிநாதையர் அவர்கள்

[பக்கம் 43]

பாலர் தமிழ் வாசகம்

ஐந்தாம் புத்தகம்

---

1. நமது தேசம்

உலகம் புகழச் சிறந்து விளங்கும் நமது தேசத்திற்கு இந்தியா என்று பெயர். இது வடக்கில் இமய மலையையும், மற்ற மூன்று பக்கங்களிலும் சமுத்திரத்தையும் எல்லையாக உடைய ஒரு பெரிய தேசம். இதைப் பரத கண்டம் என்றும் கூறுவர். இப்பெயர் வந்த காரணத்தை விளக்கச் சரித்திரத்தில் ஒரு கதை உண்டு.

ஆதிகாலத்தில் இந்தியாவின் வடபாகத்தில் துஷ்யந்தன் என்னும் ஒரு மன்னன் அரசு புரிந்து வந்தான். ஒரு நாள் வேட்டையாடும் பொருட்டு வனத்திற்குச் சென்ற அவன், கண்ணுவர் என்னும் ஒரு முனிவருடைய ஆசிரமத்தை யடைந்தான். அங்குச் சகுந்தலை என்னும் அழகுமிக்க ஒரு கன்னிகை இருந்தனள். அவளைத் துஷ்யந்தன் மணந்து கொண்டான். சகுந்தலைக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அக் குழந்தையின் பெயர் பரதன்.

மிகத் தைரியசாலியான அவன், சிறுவனாக இருந்த காலத்தில் காட்டில் ஒரு சிங்கக் குட்டியைக் கண்டு, அதைக் கையில் தூக்கிக்கொண்டு அரண்மனைக்குப் புறப்பட்டான். அப்போது தாய்ச் சிங்கம் கர்ஜித்துக்கொண்டு அவனை எதிர்த்து வந்தது. பரதன் சிறிதும் அஞ்சாமல் ஒரு கோலால் அதை வெருட்டித் துரத்தினான். அவனுடைய தைரியத்தைக் கண்ட அச் சிங்கமும் பயந்து ஓடியது. இந்த வீரனாகிய பரதன் பெரியவனான பின், நமது தேசம் முழுமைக்கும் சக்கரவர்த்தியாகிச் செங்கோல் செலுத்தி வந்தான். பராக்கிரமசாலியான இப் பரதன் ஆண்டமையால் இந்நாட்டிற்குப் பாரத கண்டம் அல்லது பாரத நாடு என்னும் பெயர் வழங்கலாயிற்று.

நமது பாரத நாடு பண்டைக் காலம் முதல் மிக்க சீரும், சிறப்பும், நாகரிகமும் வாய்ந்து விளங்கி வருகின்றது. நம் நாட்டினர் கல்வியிலும், வீரத்திலும், ஒழுக்கத்திலும், ஞானத்திலும் புகழ்பெற்றவர்கள். இத்தகைய புண்ணிய பூமியே நமது தாய் நாடாம்.

பல்வகை இயற்கைக் காட்சிகளும், வளங்களும் மலிந்துள்ளதாகிய இந்நாட்டில் இமயாசலம், விந்திய பர்வதம், மேற்குத்தொடர்ச்சி மலை முதலிய உன்னதமான மலைகள் வானளாவி நிற்கின்றன. செழித்தோங்கிய சோலைகளும்,

மரங்களடர்ந்த காடுகளும்இம்மலைச்சாரல்களில் மிகுதியாக உள்ளன. கங்கை, யமுனை, சிந்து, கோதாவரி, கிருஷ்ணை, காவிரி முதலிய நதிகள் இடையறு வெள்ளப் பெருக்குடன்ஓடுகின்றன. இந் நதிகள் பாயும் அகன்ற சமவெளிகளில் நவதானியப் பயிர்களும், மா, பலா, கமுகு, தென்னை முதலிய பலவகை விருட்சங்களும் செழுமையுடன்வளர்கின்றன. பொன், இரும்பு, இரத்தினம், நிலக்கரி முதலியவற்றையுடைய சுரங்கங்கள் ஆங்காங்கு உள்ளன. யானை, சிங்கம், புலி, மான் முதலிய நானாவிதமான பிராணி வகைகளும் ஏராளமாக இங்கு உண்டு.

நமது தேசத்தின் பிரதான பட்டண மாக டில்லி மா நகரம் விளங்குகிறது. மற்றும் காசி, பிரயாகை, காஞ்சி, மதுரை, இராமேசு வரம் முதலிய எண்ணரிய திருப்பதிகளும், கராச்சி, பம்பாய், சென்னை, கல்கத்தா முதலிய பல வியாபார ஸ்தலங்களும் இருக்கின்றன.

நமது தேசத்தில் முப்பத்தைந்து கோடி ஜனங்கள் உள்ளார்கள். இவர்களில் பெரும் பாலர் இந்து மதத்தினர்; சிலர் மகமதிய மதத் தினர்; சிலர் கிறிஸ்துவ மதத்தினர். இன்னும் வேறு சில மதத்தினரும் உளர். மேலும் இந்தி யர்கள் அனைவரும் ஒரே பாஷையைப் பேசு கிறதில்லை. இப் புத்தகத்தை வாசிக்கும் நீங்கள் எல்லோரும் தமிழ் மொழியைப் பேசுகிறீர்கள்.

இதைப் போலவே மலையாளம், தெலுங்கு, கன்னடம், மராட்டி, வங்காளி, ஹிந்தி, உருது முதலிய பல்வேறு பாஷைகளைப்பேசும் ஜனங்கள் நமது நாட்டில் வாழ்கின்றனர். இவ்விதம் பாஷைகளிலும் மதங்களிலும் வேறுபட்டிருப்பதன்றி, நடையுடை பாவனைகளிலும் நாம் வேறுபட்டிருக்கிறோமென்றாலும், நாம் அனைவரும் இந்திய மக்களே. ஆதலால் நமக்குள் வேற்றுமை பாராட்டாமல் ஒற்றுமையுடன் வாழ்ந்து கல்வி, கைத்தொழில், வியாபாரம், செல்வம் இவற்றால் நமது தேசம் முன்னேற்றமடைய முயற்சிப்பது நமது கடமையாகும்.

சொல் விளக்கம் :—பண்டைக் காலம் = பழைய காலம். இத்தகைய = இப்படிப்பட்ட. வானளாவி = ஆகாயத்தைத், தாவி. இடையறா = இடைவிடாத. எண்ணரிய = கணக்கற்ற. திருப்பதி = புண்ணிய க்ஷேத்திரம். அசலம், பர்வதம் = மலை.

கேள்விகள் :—

1. இந்தியாவிலுள்ள முக்கியமான மலைகள், நதிகள், நகரங்கள் இவற்றின் பெயர்களைக் கூறு.
2. பின்வரும் சொற்களுக்கு, அதே கருத்துள்ள வேறு சொற்களை இப்பாடத்திலிருந்து கண்டுபிடித்து எழுதுக. (உ-ம்.) மா = பெரிய. மலை, மொழி, பழைய காலம், அகன்ற, ஆறுகள், அளவற்ற.
3. இந்தியாவில் பேசப்படும் பாஷைகள் எவை?
4. நமது நாட்டுக்குப் பரத கண்டம் என்று பெயர் வந்த காரணம் யாது?

2. எங்கள் நாடு (பாட்டு)

1. மன்னும் இமய மலை யெங்கள் மலையே
மா நில மீதிது போற்பிறி திலையே!
இன் நறு நீர்க்கங்கை யாறெங்கள் யாறே
இங்கிதன் மாண்பிற்கு எதிர்எது வேறே?

2. பன்னரும் உபநிட நூல்எங்கள் நூலே
பார்மிசை யேதொரு நூல்இது போலே?
பொன்ஒளிர் பாரத நாடெங்கள் நாடே
போற்றுவம் இஃதை யெமக்கிலை யீடே.

3. மாரத வீரர் மலிந்த நன்னாடு
மாமுனி வோர்பலர் வாழ்ந்த பொன்நாடு
நாரத கான நலம்திகழ் நாடு
நல்லன யாவையும் நாடுறு நாடு.

4. பூரண ஞானம் பொலிந்த நன்னாடு
புத்தர் பிரான் அருள் பொங்கிய நாடு
பாரத நாடு பழம்பெரு நாடே
பாடுவம் இஃதை யெமக்கிலை யீடே.

5. கன்னலும் தேனும் கனியும் இன்பாலும்
கதலியும் செந்நெலும் நல்கும் எக்காலும்
உன்னத ஆரிய நாடெங்கள் நாடே!
ஓதுவம் இஃதை யெமக்கிலை யீடே!

சொல்விளக்கம் :—மன்னும் = நிலை பெற்ற. மாநிலம் = பெரிய பூமி. பிறிது = வேறு. இலை = இல்லை. இன் = இனிய. நறும் = நல்ல. யாறு = ஆறு. மாண்பு = பெருமை. பன்னரும் (பன்ன + அரும்) = சொல்லமுடியாத. உபநிடம் (உபநிடதம்) = வேத நுட்பம். பார்மிசை = பூமியின்மேல். ஒளிர் = விளங்குகின்ற. ஈடு = சமானம். கானம் = இசை. நாடுறும் = விரும்புகின்ற. பொலிந்த = விளங்கின. பிரான் = தலைவன். கன்னல் = கரும்பு.

3. வேடனும் புறுக்களும்

கோதாவரிக் கரையிலுள்ள ஒரு மரத் தடியில் வேடன் ஒருவன் வலையை விரித்து, பலவகைப்பட்ட தானியங்களை இறைத்துவிட்டுச் சிறிது தூரத்திலிருந்த செடியின் மறைவிற் பதுங்கிக் கொண்டிருந்தான். அப்பொழுது சித்திரக்கிரீவன் என்னும் புறு அரசன், தனது பரிவாரமாகிய இதர புறுக்களுடன் இரை தேடும் நிமித்தம் அவ்விருட்சத்தில் வந்து உட்கார்ந்தது. மரத்தடியில் கிடக்கும் தானியங்களைத் தின்ன ஆவல் கொண்ட பரிவாரப் புறுக்களைப் பார்த்து, "மனித சஞ்சாரமில்லாத இக் காட்டில் தானியங்கள் எப்படி வரும்? யாரேனும் வஞ்சகமாக அவைகளைத் தூவியிருக்க வேண்டும். நாம் அவற்றினருகில் செல்லக்கூடாது" என்று அது கூறிற்று.

அதைக்கேட்ட ஒரு புறு கர்வத்தோடு, "இவ்விதம் ஆலோசித்துக் கொண்டிருந்தால் ஓர் இரையும் அகப்படாது. மேலும் வெட்கப்படுகிறவன், பொறுமையுள்ளவன், தீராச் சந்தேகமுள்ளவன், இவர்கள் ஒருபொழுதும் சுகமனுபவிக்கமாட்டார்கள். நாம் அஞ்சாமல் போய்த் தின்போம்" என்றது. இவ்வார்த்தைகளைச் செவியுற்ற அதன் நண்பர்களெல்லாம் தானியத்தைத் தின்னும் பொருட்டு நிலத்தி

லிறங்கி வலையில் சிக்கிக்கொண்டன. அதைக் கண்ட சித்திரக்கிரீவன், "எல்லோரும் என் சொல்லைக் கேளாமற் போனார்கள். இப்போது நான் ஒன்றியாய் இருந்து பயனில்லை. வாழ்விலும் தாழ்விலும் எனது பரிவாரங்களுடன் இருப்பது என் கடமை" என்று சொல்லி அதுவும் வலையில் வந்து அகப்பட்டுக் கொண்டது.

பட்சிகள் வலையிற் சிக்கிக்கொண்டதைப் பார்த்த அவ்வேடன், அவ்விடத்தை நோக்கி வரத் தொடங்கினான். புறாக்கள் நடு நடுங்கித் தங்கள் மன்னனைப் பார்த்து, "உமது வார்த்தையை மீறாமல் மரத்திலேயே இருந்திருந்தால் இக் கதி வந்திராது" என்றன. சித்திரக்கிரீவன், "இப்பொழுது அதைச் சொல்லிப் பயன் யாது? நாம் ஓர் உபாயம் செய்தால் தப்பிக்கலாம். நான் இப்பொழுது சொல்லுவதையாவது செய்யுங்கள். எல்லோரும் வலையோடு கூட ஒருமிக்கப் பறந்து வேறிடத்திற்குப் போகவேண்டும். அப்படிச் செய்தால் தான் நாம் உயிர் தப்பலாம்" என்று நற்புத்தி கூறியது. உடனே எல்லாப் பறவைகளும் வலையோடுகூடச் சடுதியிற் பறந்து போயின.

அதைத் தூரத்திலிருந்து பார்த்த வேடன், "இவைகள் ஒரே மனதாய் வலையைக் கொண்டு போயின" என்று சொல்லி ஆச்சரியப்பட்டு

அவைகளின் பின்னே ஓடும்போது, புருக்கள் கண்ணுக்கு மறைந்துவிட்டன. பிறகு

அவன், "பட்சிகள் தவறியதோடு வலையையும் இழக்க நேர்ந்ததே" என்று வருத்தத்துடன் வீடு திரும்பினான்.

புரு அரசன் தனது கூட்டத்தைப்பார்த்து, "சித்திர வனத்தில் என் சிநேகிதனான இரணியகன் என்னும் எலிராஜன் இருக்கிறான். அவன் பற்களினால் இந்த வலையை யறுப்பான். ஆகையால் அங்கே பறந்து செல்லுவோம்" என்றது. புருக்களும் அவ்விதமே பறந்து சென்று எலி ராஜன் வளையண்டை இறங்கின.

ஏதாவது ஆபத்து நேரிடுமென்பதைக் குறித்துத் தன் வளைக்கு நூறு வழிகள் செய்து கொண்டு உள்ளே இருந்த இரணியகன், புருக்கள் இறங்கிய சத்தத்தைக் கேட்டுப் பயந்து வெளி வராமலிருந்தது. அப்பொழுது சித்திரக் கிரீவன், "நண்பனே! நான்தான் புரு அரசன்" என்றது. இரணியகன் அதைத் தன் தோழனது குரல் என்றறிந்து, களிப்புடன் சீக்கிரமாக வளையினின்றும் வெளி வந்தது. சித்திரக்கிரீவன் நிகழ்ந்ததை நவின்று, வலையை அறுத்து எல்லோரையும் விடுவிக்குமாறு வேண்டிற்று. அதற்கு எலி, "என் பல் மிகவும் மெல்லியது. எனக்குப் பலமும் குறைவு. ஆதலால் நீ அகப்பட்டுக் கொண்டிருக்கும் கயிறுகளை யறுத்து உன்னை மட்டும் விடுவிக்கிறேன்" என்று பதிலளித்தது. அதைக்கேட்ட புரு அரசன், "அது சரியன்று. முதலில் எனது பரிவாரங்களைக் காப்பாற்றி, பிறகு என்னை விடுவி" என்று வற்புறுத்தியது. அப்பொழுது எலி, "மித்திரா! நீ சுய நலங் கருதாதவன். அடுத்தவர்களை ஆதரிக்கிறவனாய் இருக்கிறாய்" என்று கூறி எல்லாவற்றின் கயிறுகளையும் அறுத்து, பின்பு சித்திரக்கிரீவனுடைய கட்டைத் துணித்து, எல்லாப் புருக்களையும் தப்புவித்தது. புருக்கள் தமது அரசனது பெருந்தன்மையையும், எலிராஜனது உபகாரத்தையும் புகழ்ந்து, பிரிய வார்த்தைகள்

சொல்லிச் சித்திரக்கிரீவனுடன் தம் இருப்பிடத்திற்கு ஏகின.

"சேர்ந்து வாழ்வதே சிறந்த வலிமை."

சொல் விளக்கம் :—பரிவாரம் = இனம், சூழ்ந்துள்ளவர். கதி=நிலைமை. சடுதியில் = சீக்கிரமாக. நவின்று = சொல்லி. மித்ரா=சினேகிதனே.

கேள்விகள் :—

1. பின்வரும் சொற்களுக்கு, அதே கருத்துள்ள வேறு சொற்களை இப்பாடத்திலிருந்து எடுத்து எழுது :—
   கூறு, கேட்ட, நண்பன், துணித்து.
2. வித்தியாசத்தை விளக்குக :—
   இரை - இறை ; இரங்கி - இறங்கி.
3. மரத்தடியில் தானியங்களைக் கண்ட புறா அரசன் என்ன சொல்லிற்று ?
4. எவ்விதமானவர்களுக்குச் சுகம் ஏற்படாது ?
5. வேடன் ஏன் வருத்தப்பட்டான் ?
6. எலி ஏன் புறா அரசனை மட்டும் விடுவிப்பதாகக் கூறிற்று?
7. அதற்குப் புறா அரசன் கூறிய பதில் யாது ?



4. யானை

பிராணி வர்க்கங்களில் மிகப் பெரியது யானை. அது பருத்த உடலும், திரண்ட துதிக்கையும், நீண்ட தந்தங்களும் உள்ள மிருகம். பார்ப்பதற்குப் பயங்கரமான இம் மிருகம் பழகிச் சாதுவான பிறகு, குதிரையையும் நாயையும் போல நானுவிதமான காரியங்களைச் செய்யும். ஆலயங்களில் அலங்காரத்துக்காகவும், அரண்மனைகளில் ஆடம்பரத்துக்காகவும், வியாபாரிகளின் பளுவான சுமைகளைத் தூக்குவதற்காகவும் யானைகள் வளர்க்கப்படுகின்றன. அது நாம் ஏவும் விதம் மிகப் பெரிய மரத்துண்டுகள், கற்கள் முதலியவற்றைத் தூக்கி ஒன்றன்மேல் ஒன்ருக அடுக்கும்.

புத்தி நுட்பத்தினுல் மற்றும் பல வேலைகளையும் யானை செய்யுந் திறமை யுடையது.

மிகக் கம்பீரமான தோற்றத்தையுடைய யானையின் அங்க அமைப்பைக் கவனியுங்கள். யானையின் குறுகிய கழுத்து அதன் உரத்த பெரிய தலையைத் தாங்குகிறது. அதன் காதுகள் முறப்போல் அகன்று பெரிதாகக் காணப்படுகின்றன. அதன் சிறிய கண்கள் கூரிய பார்வையுடையன. அதன் முகத்திலிருந்து நீண்ட உறுப்பு ஒன்று தொங்குகிறதல்லவா ? அதுதான் துதிக்கை அல்லது தும்பிக்கை. அது யானைக்கு நாசியாகவும், கையாகவும் உதவுகிறது. அதிலுள்ள நாசித்துவாரங் களிரண்டினுலும் யானை மூச்சுவிடும். துதிக் கையினுல் தண்ணீரை உறிஞ்சியும், இரையை எடுத்தும் உட்கொள்ளும். துதிக்கையின் நுனியிலுள்ள விரல் போன்ற அவயவத்தினுல் சிறிய ஊசியையும் யானை பொறுக்கி எடுக்க வல்லது. மனிதரால் தூக்கமுடியாத சுமைகளை எடுக்கவும், மரக்கிளைகளை முறிக்கவும், மரங்களை வேரோடு பிடுங்கவும், துதிக்கை அதற்கு உப யோகப்படுகிறது.

ஆண் யானைக்குத் தந்தம் உண்டு. இது மூன்றடி நீளம் வளர்ந்து அடி பருத்து, நுனி கூர்மையாக இருக்கும். வாயிலிருந்து துதிக் கையின் இருபுறமும் வளர்ந்துள்ள இத்

தந்தங்கள் நிலத்தைத்தோண்டவும், எதிரிகளைத் தாக்கவும் யானைக்கு உதவியாகின்றன. வெண்மையும் உறுதியுமுள்ள இத் தந்தத்தினால் பெட்டி, சீப்பு, சிமிழ், பதுமை முதலிய பலவிதச் சாமான்கள் செய்யப்படுவதால், இது மிகவும் விலைமதிப்புள்ளது.

பெரிய யானைகள் உயரத்தில் பன்னிரண்டு அடியும், நீளத்தில் ஒன்பது அடியும் வளரும். உருவத்தில் சிறுத்துள்ள ஒருவித யானைகளைச் சிற்றானை என்பார்கள். யானையின் தோல் தடித்துச் சொரசொரப்பாக விருப்பதால் வெயில், மழை இவைகளைத் தாங்குவதற்கும், ஈ, கொசு முதலியன அதன்மேல் உட்கார்ந்து கடித்தாலும் உணர்ச்சி உண்டாகாமலிருப்பதற்கும் அது சாதகமாகிறது. தூண்போல் பருத்துள்ள நான்கு கால்களும் யானையின் பளுவான உடலைத் தாங்குவதற்கு ஏற்றனவாய் அமைந்திருக்கின்றன. அதன் ஒவ்வொரு காலிலும் ஐந்து குளம்புகள் உண்டு.

யானை காடுகளில் கூட்டங் கூட்டமாய்ச் சஞ்சரிக்கும். புல், கிழங்கு, இளங் கிளை, கரும்பு, பழம், தானியங்கள் முதலிய தாவர பதார்த்தங்களைத் தின்பதால் அது சாக பட்சணியே. ஆண் யானைக்குக் "களிறு" என்றும், பெண் யானைக்குப் "பிடி" என்றும் பெயர். பெண் யானைகள் இரண்டு மூன்று வருஷத்திற்கு

ஒரு முறை ஒரு குட்டி போடும். யானைக் கன்று பெரிய யானையாக வளரச் சுமார் இரு பது வருஷம் செல்லும். சாதாரணமாக ஒரு யானையின் ஆயுட் காலம் நூறு வருஷத்திற்குக் குறையாது.

அரணியங்களில் திரியும் யானைகளைப் பிடித் துப் பழக்க விரும்புகிறவர்கள், பழகிய யானை யொன்றைக் காட்டில் விடுவார்கள். அது, சுற்றிலும் வேலி கோலிப் பாதுகாப்புள்ள ஓரிடத்தில், தான் அழைத்து வரும் புதிய யானைகளைக் கொணர்ந்து சேர்க்கும். இப் புதிய யானைகளைப் பல தினங்கள் தீனியில்லாமல் அடைத்து வைத்திருப்பதால், நாளடைவில் அவைகள் பழகிவிடுகின்றன. இது யானையைக் கொண்டே யானையைப் பிடிக்கும் ஒரு விதம்.

ஆழமான பெரிய பள்ளங்கள் தோண்டி, அவைகளின்மேல் இலை, தழைகளைப் பரப்பி மூடிக் காட்டிலுள்ள யானைகளை அந்தப் பக்க மாக விரட்டுவார்கள். அத் தழைகளின்மேல் யானைகள் ஓடும்பொழுது, இப்பள்ளங்களில் விழுந்து வெளியே வரமுடியாமல் சிக்கிக்கொள் ளும். இந்த யானைகளையும் மேற்கூறியவாறு தீனியின்றி வைத்திருந்து, பிறகு பழக்குவார் கள். இவ்வாறு படுகுழியில் தள்ளி யானையைப் பிடிப்பது மற்றொரு விதம்.

யானை புத்தி நுட்பமுள்ள சாதுவான பிராணி. அதற்கு ஞாபக சக்தி அதிகம் உண்டு. ஆதலால் ஒருவர் தனக்குச் செய்த நன்மையையும் தீமையையும் எளிதில் மறக்காது. தன்னிடத்துப் பட்சமாக இருப்பவர்களிடம் நன்றியறிதல் காட்டி, இட்ட வேலைகளைச் செய்யும். கொடூரமாக நடத்தித் தனக்குக் குறும்பு செய்கிறவர்களையோ சமயம் பார்த்துப் பழிக்குப் பழி வாங்காமல் விடாது.

பழமொழிகள் :—

(1) யானைவரும் பின்னே, மணி யோசை வரும் முன்னே.

(2) யானை அசைந்து தின்னும்; வீடு அசையாமல் தின்னும்.

(3) யானைக்கும் அடி சறுக்கும்.

(4) தறுகண் யானை தான் பெரிதாயினும்
சிறு கண் மூங்கிற் கோற்கஞ் சும்மே.

சொல் விளக்கம் :—வன விலங்கு=காட்டு மிருகம். விசித்திரமாக=வேடிக்கையாக. அரணியம்=காடு.

குஞ்சரம், கரி, கஜம், அத்தி, வேழம் இச் சொற்கள் யானையின் வேறு பெயர்களாகும்.

கேள்விகள் :—

1. சில வன விலங்குகளின் பெயரைக் கூறு.
2. பின்வரும் சொற்களுக்கு இரண்டு அர்த்தம் சொல் :—
விலங்கு, கூறு, கரி, கஜம், பிடி.
3. யானையின் வேறு பெயர்கள் யாவை?
4. யானையைப் பற்றிய பழமொழிகளைச் சொல்.
5. பின்வரும் சொற்களை உபயோகித்து வாக்கியங்கள் எழுது :—
நானாவிதமான, களிறு, படுகுழி, பழிக்குப் பழி

———

5. யானைக்கும் பானைக்கும் சரி

தென்னாட்டிலிருந்த ஒரு செல்வவான் தனது ஒரே மைந்தனது கலியாணத்தில் ஊர் வலம் நடத்துவதற்கு ஓர் மாவுத்தனிடஞ் சென்று அவனதுயானையை இரவலாகவாங்கிக் கொண்டு வந்தான். திருமணம் மிக்க விமரிசையாக நடைபெற்றது. ஊர்வலம்முடிந்தவுடனே அந்தக் குஞ்சரம் தற்செயலாய்க் கீழே விழுந்து ஆவி துறந்தது. அச் செல்வவான் உடனே மாவுத்தனிடஞ் சென்று "தெய்வீகமாக உன்னுடையயானை மரித்துப்போனதால் அதன் விலையையாவது தருகிறேன்; அல்லது பதிலாக வேறு யானை யொன்றையாவது உனக்கு வாங்கித் தருகிறேன்" என்று நவின்றான். மூர்க்க குணமுள்ள அந்தப் பாகன், "நீ செப்பிய இரண்டிற்கும் நான் உடன்படேன். எனது கஜமே எனக்கு வேண்டும்" என்று வீண் பிடிவாதங் கொண்டு மன்னனிடஞ் சென்று வழக்குத் தொடுத்தான். அரசனும் பிரதிவாதியை விசாரித்து உற்றதை உணர்ந்து மாவுத்தனைப் பார்த்து, "தெய்வ கதியாக இறந்த யானைக்குப் பதிலாக வேறு யானையை யாவது, அல்லது அதன் விலையையாவது பெற்றுக்கொள்" என்று பல விதத்திலும் சமாதானம் சொல்லிப் பார்த்தான். அந்த மூர்க்க குணமுள்ள மாவுத்தன், "எனது யானையே

எனக்கு வேண்டும்; வேறென்றும் பெற்றுக் கொள்ளேன்" என்று ஒரே பிடிவாதமாய்ச் சாதித்தான். செல்வவான் மனங் கலங்கினன். அரசன் சிறிது நேரம் ஆலோசித்து, "நீங்கள் இருவரும் நாளையதினம் வாருங்கள்" என்று கூறி அவர்களை அனுப்பிவிட்டான்.

அரசனது அரண்மனையில் மரியாதை ராமன் என்னும் மதி நுட்பமுள்ள ஒரு விகட கவி இருந்தான். அரசன் அன்று நடைபெற்ற அதிசய வழக்கைப்பற்றி மரியாதை ராமனிடம் கூறினன். வீண் பிடிவாத குணமுள்ள மாவுத்தனுக்குப் புத்தி கற்பிக்க, தான் ஓர் உபாயஞ்செய்வதாய் அவன் மன்னனிடம் தெரிவித்தான்.

சிறிது நேரத்திற்கெல்லாம், மரியாதை ராமன் பிரதிவாதியாகிய செல்வவானை இரகசியமாக அழைத்து, "நாளையதினம் நீ இங்கு வரவேண்டாம். உன் வீட்டு நடையில் கதவை மூடிப் பழைய பானைகளை அடுக்கி வைத்துக் கொண்டிரு. மாவுத்தன் இங்கே வந்ததும், உன்னை யழைத்து வர அவனை அனுப்புகிறேன். அவனும் அவசரமாக உன் வீட்டுக்கு வந்து கதவைத் திறப்பான். அப்பொழுது பானைகளெல்லாம் நொறுங்கி உடைந்துவிடும். அதற்காக அவன் என்ன சமாதானஞ் சொன்னாலும், 'என் பானையே எனக்கு வேண்டும்' என்று நீ வேந்தனிடம் வந்து பிராது

பண்ணிக்கொள்'' என்று சொல்லி அவனை அனுப்பினான்.

மறுநாள் மரியாதை ராமன் கூறியவாறே நடந்தது. மாவுத்தனால் செல்வவான் வீட்டுப் பானைகள் உடைந்தன. செல்வவான், "வெகு காலமாக ஆண்டுவந்த என் பானைகளை இந்த மாவுத்தன் உடைத்து விட்டான். எனது பழைய பானைகளே எனக்கு வேண்டும்'' என்று மன்னனிடம் முறையிட்டான். இந்தச் சூழ்ச்சியை மெச்சிய அவ் வேந்தன், அந்தப் பாகனைப் பார்த்து, "நீ என்ன சொல்லுகிறாய்?'' என்று வினவினான். அதற்கு அந்த முரட்டுப் பாகன் முன் கோபத்துடன், "யானைக்கும் பானைக்கும் சரியாகப் போயிற்று. என்னை விட்டு விடுங்கள்'' என்றான். அரசனும் அவ்வாறே தீர்ப் பளித்தான்.

"வீண் பிடிவாதம் கூடாது''

சொல் விளக்கம்—மாவுத்தன்=யானைப்பாகன். விமரிசையாக = சிறப்பாக. செப்பிய=சொல்லிய. பிராது = வழக்கு. உற்றதை=நடந்ததை.

கேள்வி :—

நீயே செல்வவான் என்று நினைத்துக்கொண்டு, இந்தக் கதையைச் சொல்.

6. பொருட்காட்சி

கோபால்:—அப்பா! இந்த அச்சிட்ட துண்டுக் காகிதத்தைப் பாருங்கள். நமது ஊரில் நகர பரிபாலன சபையார் ஒரு பொருட் காட்சி நடத்துகிறார்களாம்.

தகப்பனார்:—ஆம். நமது ஊர்ப் பெரிய கோவில் திருவிழாக் காலத்தில் இவ் வருடம் பொருட்காட்சி நடைபெறப் போவதாக நானும் கேள்விப்பட்டேன். திருவிழா ஆரம்பித்துவிட்டதல்லவா? ஆகையால் பொருட்காட்சியும் இப்பொழுது நடை பெறும்.

கோபால்:—பொருட்காட்சி என்றால் என்ன?

தகப்பனார்:—பலவித விவசாயப் பொருள்கள், வியாபாரப் பொருள்கள், கைத்தொழிற் பொருள்கள், இயந்திரங்கள் மற்றும் பல வகைப் பொருள்களையெல்லாம் ஓரிடத்தில சேகரித்து, வரிசைப்படுத்தி அழகாக அமைத்து வைத்திருப்பது பொருட்காட்சி எனப்படும்.

கோபால்:—பொருட்காட்சியை ஏன் திருவிழாக் காலத்தில் நடத்துகிறார்கள்?

தகப்பனார்:—திருவிழாவுக்காகப் பல ஊர்களி லிருந்தும் வரும் ஜனங்கள் இவைகளையும் பார்த்துச் செல்லும்பொருட்டு.

கோபால் :—அப்படியானல் என்னையும், கமலத்தையும் எப்பொழுது அழைத்துக்கொண்டு போகிறீர்கள் ?

தகப்பனர் :—இன்று சாயங்காலம் போவோம்.

(தகப்பனருடன் கோபாலும், கமலமும் தலைக்கு இரண்டணுக் கொடுத்து அனுமதிச்சீட்டு வாங்கிக்கொண்டு பொருட்காட்சி சாலைக்குள் பிரவேசிக்கிருர்கள்.)

கமலம் :—கண்ணைக் கவரும் பல விநோதப் பொருள்கள் காண்கின்றனவே! ஒவ்வொரு காட்சி சாலையும், கடையும் பல விதங்களில் அலங்கரிக்கப்பட்டு, எங்கும் பல நிறமுள்ள மின்சார விளக்குகள் போடப்பட்டிருக்கின்றன !

கோபால் :—பெரிய திருவிழாவில் கூடுவதுபோல் ஆயிரக்கணக்கான ஜனங்கள் கூட்டங் கூட்டமாக முன்னமேயே வந்து பார்த்துக் கொண்டிருக்கிருர்களே. என்ன வேடிக்கை!

தகப்பனர் :—இதோ பார். விவசாயப் பொருள்கள் வைக்கப்பட்டிருக்கின்றன.

விவசாய உத்தியோகஸ்தர் :—வாருங்கள். இதோ சர்க்கார்ப் பண்ணையில் விளைவித்த முதல்தரமான தானிய வகைகளும், காய் கறி வகைகளும், புதுமாதிரி உழவுக் கருவிகளும், எருத்தினுசுகளும் இருக்கின்றன. இவை

களை விவரிக்கும் துண்டுப் பத்திரிகைகளைத் தருகிறேன். ஓய்வுநேரங்களில் படித்துப் புதிய விவசாய முறைகளைப் பின்பற்றுங்கள். அவ்விதஞ் செய்தால் நல்ல ஊதியம் அடையலாம்.

கமலம் :—அடுத்த கொட்டகையில் பலவித வேஷ்டிகள், பட்டுத் துணிகள், கதர் ஆடைகள், சேலைகள் முதலியன தொங்க விடப்பட்டிருக்கின்றனவே, அவைகளைப் பார்ப்போம்.

கோபால் :—கமலம்! புதுமாதிரியான தறிகளும், ராட்டினங்களும் இருப்பதைக் கவனித்தாயா ?

தகப்பனார் :—இதோ பார். எட்டு முழ நீளமுள்ள ஒரு பட்டு வஸ்திரத்தை மெல்லியதாக நெய்து ஒரு மோதிரத்துக்குள் செலுத்தி வைத்திருக்கிறார்கள். இது விந்தையல்லவா ? நமது நாட்டில் இப்படிப்பட்ட நயமான உயர்தர ஆடைகளும் நெய்கிறார்கள்.

கோபால் :—சித்திர வேலைக் காட்சி என்று பெரிய எழுத்துக்களில் ஒரு பலகை அதோ தொங்கவிடப்பட்டிருக்கிறதே, அங்கே போய்ப் பார்க்கலாமா ?

சித்திரக் காட்சி அதிகாரி :—வந்து பாருங்கள். இங்கு, முதல் அறையில் அபூர்வமான வேலைப்பாடுக ளமைந்த கற்சிலைகளும், உலோக விக்கிரகங்களும், மெழுகு உருவங் களும் வைக்கப்பட்டுள்ளன. இரண்டா வது அறையில் நம் நாட்டிலுள்ள சித்திர வேலை நிபுணர்களால் வரையப்பட்ட பல அழகான படங்கள் தொங்கவிடப்பட் டுள்ளன. மூன்ருவது அறையில் திருவாங் கூரிலிருந்து செய்து வந்துள்ள தந்த வேலை மாதிரிகள் இருக்கின்றன. நான் காவது அறையில் வர்ணமிட்ட மண் பொம்மைகளும், விளையாட்டுச் சாமான் களும், நெட்டியினுலும் வர்ணக் காகிதத்தி னுலும் செய்யப்பட்ட பூ மாலைகளும், மற் றும் பலவித விசித்திர வேலைப்பாடமைந்த பொருள்களும் வைக்கப்பட்டிருக்கின்றன.

கோபால் :—இந்தச் சலவைக் கல்லில் செதுக் கப்பட்ட உருவம் மாட்சிமை தங்கிய நமது எட்டாம் எட்வர்ட் சக்கரவர்த்தியைப் போலவே யிருக்கிறது !

கமலம் :—அப்பா, இந்தப் படத்தில் காண்பவர் மகாத்மா காந்தியல்லவா ?

தகப்பனர் :—ஆமாம், எதிரில் வந்து அவர் நிற்பது போல் வரையப்பட்டிருப்பது மெச்சத்தக்கதன்ருே ?

கமலம் :—இதோ தொங்கும் ரோஜாப்பூக் குஞ்சம் வைத்த மல்லிகை மாலையை விலைக்கு வாங்குங்கள்.

தகப்பனர் :—அது உண்மையான மல்லிகைப்பூ மாலையன்று ; நெட்டியினுலும் காகிதத்தினுலும் செய்யப்பட்டது. என்ருலும் அதில் ஒன்று வாங்குவோம். நமது வீட்டிலுள்ள சரசுவதி படத்திற்குப் போடலாம்.

(விலை கொடுத்து வாங்குகிருர்)

கமலம் :—அதோ கைத் தொழில்கள் செய்து காட்டுகிருர்களே, அவைகளைப் பார்த்து வருவோம்.

கைத்தொழிலதிகாரி :—இங்கே பென்சில், பொத்தான், சவுக்காரம், சீமைச்சுண்ணும்பு, பெப்பர்மெண்டு, தீப்பெட்டி முதலியவைகளைச் சிறு இயந்திரங்கள் மூலமாகவும் கையினுலும் செய்து காட்டுகிருர்கள். அவைகளைக் கவனித்துப் பாருங்கள்.

கோபால் :—அப்பா ! இந்தத் தொழில்களைச் சொற்பச் செலவில் நமது வீட்டிற்கூடச் செய்யலாம் போலத் தோன்றுகிறதே.

தகப்பனர் :—ஆம். இவ்விதம் ஒவ்வொரு வீட்டிலும் சுலபமாகச் செய்யலாம். அவ்வாறு செய்துவந்தால் நல்ல லாபங் கிடைக்கும்.

கமலம் :—கொட்டாங்கச்சியிலிருந்து கூடப் பொத்தான் செய்கிறார்களே !

தகப்பனார் :—இதோ இந்த வெள்ளிச் சாமான்கள் மிக அருமையாகச் செய்யப்பட்டுள்ளன. இவைகள் கும்பகோணத்திலிருந்து செய்து வந்தவை. மின்சார விளக்குகளின் வெளிச்சத்தில் கல்லிழைத்த நகைகளெல்லாம் கண்ணைப் பறிக்கின்றனவல்லவா ?

கமலம் :—அடுத்த கடையில் பித்தளை, வெண்கலப் பாத்திரங்கள், ஜாடிகள் முதலியவை இருக்கின்றன. அவைகளும் நல்ல வேலைப்பாடமைந்தவை.

கோபால் :—இதோ கடைசியாகவுள்ள கொட்டகையில் கட்டில், நாற்காலி, மேஜை முதலிய மரச் சாமான்களும், பிரம்புச் சாமான்களும் இருப்பதைப் பார்.

தகப்பனார் :—நேரமாகிவிட்டது. வீடு திரும்புவோம்.

(எல்லாவற்றையும் பார்த்த பிறகு வீடு திரும்புகிறார்கள்)

கமலம் :—இவ்வளவு பொருள்களும் நமது நாட்டின் வெகு தொலையிலிருந்து கொண்டு வந்திருக்கிறார்களே, இதற்கு ஏராளமான பணம் செலவாகுமன்றோ ?

தகப்பனர் :—பணம் செலவானுலும் பொருட் காட்சி சாலைகளினுல் ஏற்படும் நன்மைகள் பல. நமது நாட்டின் தொழில் முறைகள் விருத்தியாகும். ஏனென்ருல், இங்குள்ள பொருள்களைப் பார்த்துப் பிறரும் செய்ய முயற்சிப்பார்கள். மேலும் பல ஊர்களி லிருந்து வரும் வியாபாரிகள் தங்கள் பொருள்களைப்பற்றி விளம்பரஞ் செய்வ தால் வியாபாரமும் விருத்தியாகும்.

கோபால் :—இதுவரையில் நாம் பார்த்தறியாத பல பொருள்களால் அநேக விஷயங்களைக் கற்றுக்கொண்டோம். எண்ணரிய ஜனங்கள் இந்தப் பொருட்காட்சியினுல் தங்கள் உலக அறிவையும் விருத்தி செய்து கொள்ளு கிருர்கள்.

கேள்விகள் :—

1. பொருட்காட்சி யென்ருல் என்ன ?
2. விசேஷ காலங்களில் அதை நடத்தும் நோக்கம் யாது ?
3. பொருட்காட்சி சாலை எவ்வாறு அமைக்கப்பட்டிருக்கும் ?
4. அனுமதிச் சீட்டுக்கு விலை வாங்குவது எதன் பொருட்டு ?
5. பொருட்காட்சியினுல் ஏற்படும் நன்மைகளைப்பற்றி நான்கு வாக்கியங்கள் எழுது.

7. எறும்பும் புறுவும்

குறிப்பு:—இப் பாடத்தை மௌனமாக வாசித்து, கதைத் தொடர்ச்சி விளங்கும்படி வாக்கியங்களை வரிசைப் படுத்தி 1, 2, 3 முதலிய இலக்கங்கள் இடவும். பிறகு தொடர்ச்சியாக வாசிக்கவும்.

அந்த மரத்தின் கிளை யொன்றில் அநேக எறும்புகள் ஊர்ந்துகொண்டிருந்தன. ஒரு தடாகத்தின் கரையில் ஓர் ஆலமரம் செழித் தோங்கி வளர்ந்து இருந்தது. இதை மரத்திலிருந்த ஒரு புறு கண்டுஇரக்கங்கொண்டு ஓர் இலையைப் பறித்து எறும்பின் பக்கத் திற் போட்டது. காற்றடித்து ஒரு எறும்பு தண்ணீரில் விழுந்து தவித்துக்கொண்டிருந் தது. மரத்திலிருந்த அப் புறுவை ஒரு வேடன் கொல்லக் குறி பார்த்துக்கொண்டிருந் தனன். இக் கதையால் 'உபகாரம் வீண் போகாது' என்னும் நீதி விளங்குகிறதல்லவா? உடனே எறும்பு அந்த இலையின்மேல் ஏறிக் கொண்டது. அதனால் குறி தவறிவிட்டது. தண்ணீரின் அலைகள் இலையைக் கரையோரத் தில் ஒதுக்கவே, எறும்பு உயிர் தப்பிக் கரை யேறியது. அதைப் பார்த்த எறும்பு, அம்பு விடும்போது அவன் கால்விரலைக் கடித்தது. புறு பறந்தோடிப் போயிற்று.

8. வெள்ளத்தில் உதவிய வீரன்

பிறர் உயிரைக் காப்பாற்றும் பொருட்டுத் தமது உயிரை அளிக்கத் துணிந்து, தீரச் செயல்கள் புரிந்த இந்திய வீரர் பலருள் தாதாபாய் தோராலிஜி பாண்டியா என்பவர் ஒருவ ராவர். இவர் பம்பாய் இராஜதானியில் தபதி நதிக்கரையிலுள்ள சூரத் என்னும் கடற்கரைப் பட்டினத்தில் வசித்து வந்தவர். தபதி நதியில் பெருவெள்ளம் வருங்காலங்களில் சூரத் நகரம் ஆபத்திற்குள்ளாவதுண்டு.

நிகரில்லாத ஓர் வெள்ளப் பெருக்கு 1883-ம் ஆண்டில் உண்டாகிப் பிரவாகம் கரை புரண்டு சூரத் நகருள் புகுந்தது. தண்ணீரின் வேகத்தி னுல் ரஸ்தாக்கள் உடைபட்டுப் பெரிய மாளிகை களும், சர்க்கார் கட்டடங்களும்இடிந்து விழுந் தன. பட்டினத்தின் பல பாகங்களில் தண்ணீர் இருபது அடி உயரத்திற்கு மேல் தேங்கி யிருந் தது. ஆடு மாடுகள், விளைபொருள்கள், தட்டு முட்டுச் சாமான்கள் எல்லாம் ஏராளமாக வெள்ளத்திற் சேதமாயின. அந்நகர மக்கள் செய்வ தின்னதென்றறியாமல் திகைத்தனர்.

அன்று பகல் முழுதும் அரசாங்க உத்தி யோகஸ்தர்களும், நகரத்திலுள்ள பிரபுக்களும் ஜனங்களுக்கு வேண்டிய உதவிகள் புரிந்து அவர்களைத் தண்ணீரில்லாத மேடான

இடங்களுக்குக் கொண்டுபோய்ச் சேர்த்தனர். அன்றிரவு மேன்மேலும் வெள்ளம் பெருகி, அந் நகரத்து 'நவபுரா' கடைத்தெருவைச் சூழ்ந்துகொண்டது. அந்த ஆபத்தான நிலைமையை யுணர்ந்த பாரசீக வீரராகிய பாண்டியா, எவ்வாறுவது அவர்களைக் காப்பாற்றவேண்டுமென்று மன வுறுதி கொண்டார். இவர் தேகப் பயிற்சி கற்பிக்கும் ஓர் ஆசிரியர். உடலுறுதியும், நீந்துந் திறமையும், பிறர்க்குதவி செய்யும் குணமும் வாய்ந்தவர்.

அத்தருணத்தில் அவர்களைத் தப்புவிக்கக் கூடிய ஒரேயொரு படகுதான் போலீஸ் மேலதிகாரி யொருவருடைய வீட்டிலிருந்தது. அவ் வீட்டிற்கும் கடைத்தெருவிற்கும் மத்தியில் வெள்ளம் பெருகி யிருந்தது. உடனே இவர் தன் இடது கையில் ஒரு விளக்கை ஏந்திக் கொண்டும், படகைத் தள்ளுவதற்கு வேண்டிய ஒரு கோலை வாயிற் கௌவிக் கொண்டும் இருள் நிறைந்த அந்த இரவில் வெள்ளத்தில் இறங்கினர். அதைக்கண்ட மக்களனைவரும் "இவர் உயிர்பிழைத்துத் திரும்பு வாரா ?" என்று ஏங்கினர். பாண்டியா மிக்க மனவுறுதியோடு வலதுகையினுல் தண்ணீரைத் தள்ளி நீந்திச் சென்று, படகு இருக்குமிடத்தை யடைந்தார். அப்பொழுது அவருடைய கால்கைகள் சோர்ந்தன. என்ருலும், தைரியத்தைக் கைவிடாமல்

படகை அவிழ்த்து அதில் ஏறிக்கொண்டு, தம்மிடமிருந்த கோலின் உதவியால் படகை வலித்துக்கொண்டு, கடைவீதியை அணுகினார்.

படகுடன் வரும் பாண்டியாவைக் கண்ட ஜனங்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. தடவைக்குச் சிலராகப் படகிலேற்றி, அவர்களனைவரையும் வெள்ளமில்லாத இடத்திற்குக் கொண்டுபோய்ச் சேர்த்தார். இவ்விதமாக அவர் ஒருவர் மட்டும் இருநூறு ஜனங்களை அன்று காப்பாற்றினார்.

பின்பு வெள்ளம் வடிந்து ஊர் அமைதி பெற்றதும், அந் நகரவாசிகள் பாண்டியாவின் துணிகரச் செயலையும், பிறர்க்குதவி செய்யும் குணத்தையும் புகழ்ந்து, தமது நன்றிக்கு அறிகுறியாக ஒரு கடிகாரத்தையும், பணமுடிப்பு ஒன்றையும் அவருக்கு அளித்தனர். பாண்டியாவின் வீரம் உலகத்தினரால் போற்றப்பட்டுப் பலருக்கும் ஒரு வழிகாட்டியாக விளங்குகிறது.

சொல் விளக்கம் :—நிகரில்லாத = இணையில்லாத. பிரவாகம் = வெள்ளம். பட்டினம் = கடற்கரையோரமாகவுள்ள ஊர். இதர பெரிய ஊர்கள் பட்டணங்கள் எனப்படும். ஏங்கினர் = கவலைப்பட்டனர். வலித்துக்கொண்டு = தள்ளிக்கொண்டு.

கேள்விகள் :—

1. தாதாபாய் தொராலிஜி பாண்டியா எந்த ஊரிலிருந்தவர் ?
2. என்ன உத்தியோகத்திலிருந்தார் ?
3. அவருடைய குணாதிசயங்கள் என்ன ?
4. அவர் செய்த அருஞ் செயல் யாது ?

9. வியாபாரம்

ஒருவர் சுகமாக வாழ்வதற்கு அவசியமாக வேண்டிய பொருள்கள் எண்ணிறந்தன. முதலில் உணவு வேண்டும்; பின்பு உடுக்க உடையும், இருக்க வீடும் தேவை. மேலும், தொழில் செய்வதற்கான கருவிகள், போக்கு வரத்துக்கான வாகனங்கள், கல்வி கற்பதற்கான உபகரணங்கள், அழகுக்கான ஆபரணங்கள் முதலிய ஆயிரக்கணக்கான சாமான்கள் வேண்டியுள்ளன. ஒருவரது வாழ்க்கைக்கு வேண்டிய இவையனைத்தையும் தாமே செய்துகொள்வது இயலாத காரியம். ஆதலால் உலகத்திலுள்ள ஜனங்கள் பலவிதத் தொழில்கள் இயற்றி இவைகளை உண்டுபண்ணுகிறார்கள்.

ஒவ்வொரு தொழிலாளியும் தான் செய்யும் பொருள்களில் தனது உபயோகத்திற்கு வேண்டும் ஒரு சிறு பாகத்தை மாத்திரம் வைத்துக்கொண்டு, எஞ்சிய பாகத்தைப் பிறருக்கு விற்பதும், தனக்கு வேண்டிய இதரப் பொருள்களைப் பிறரிடம் வாங்கிக்கொள்வதும் அவசியமாகிறதல்லவா? இவ்விதம் ஒருவர் உண்டுபண்ணும் பொருளை வாங்கி, அதை வேண்டும் பிறருக்கு விற்பது வியாபாரம் எனப்படும். இதை வர்த்தகம் அல்லது வாணிபம் எனக்கூறுவதுமுண்டு. பொருளை வாங்கி விற்றுத் தொழில் செய்பவர்கள் வியாபாரிகள் அல்லது வர்த்தகர்கள் ஆவர்.

பண்டத்திற்குப் பண்டம் மாற்றிக்கொள்வது பழைய காலத்தில் ஏற்பட்ட வியாபார முறை. இதைப் பண்ட மாற்றல் என்பார்கள். அரிசியைக் கொடுத்துக் காய்கறிகள் வாங்குவதும், சேணியன் தான் நெய்த துணியைக் கிருஷிகனுக்களித்து அவனிடமிருந்து தானியங்களைப் பெறுவதும், பண்ட மாற்றலுக்கு உதாரணமாகும். இப்பொழுதும் கிராமச் சந்தைகளில் பண்ட மாற்றல் மூலமாக வியாபாரம் நடைபெறுவதைப் பார்க்கிறோம்.

ரூபாய் முதலிய நாணயங்களுக்குப் பண்டத்தை விற்று அப்பணத்தைக் கொண்டு வேறு பொருள்களை வாங்கிக் கொள்வது அதிகச் சௌகரியமானது. இவ்விதம் நடு நிலைப் பொருளாகிய பணத்தின் மூலமாக நடைபெறும் வியாபாரம் பொருள் மாற்றல் எனப்படும். உலகத்தில் பெரும்பாலும் இவ்விதமே வியாபாரம் நடைபெறுகிறது.

நமது நாட்டினுள் ஓரிடத்துப் பொருள் மற்றோரிடத்திற்கு அனுப்பப்பட்டு விலைப்படுவது உள் நாட்டு வியாபாரமாம். இது ரயில், படகு, வண்டிகள் மூலமாக நடைபெறும். உதாரணமாக நெல்லூர் அரிசி, அஸ்கா சர்க்கரை, சாத்தூர் மிளகாய், திருப்பத்தூர் பருப்பு முதலிய நம் நாட்டுப் பொருள்கள் நமது ஊர்களுக்கு வருகின்றன.

ஒரு தேசத்துப் பொருள் இதர நாடுகளுக்கு அனுப்பப்பட்டு விற்கப்படுவது வெளிநாட்டு வியாபாரமாகும். வெளிநாட்டு வியாபாரம் சாதாரணமாகக் கப்பல் மூலமாக நடைபெறும். பருத்தி, பட்டு, கம்பளித் துணிகள், இரும்புச் சாமான்கள், இயந்திரங்கள், மருந்துகள், பலவகை விளையாட்டுக் கருவிகள் முதலியன இங்கிலாந்து, அமெரிக்கா, ஜப்பான் முதலிய வெளி நாடுகளிலிருந்து நமது இந்தியாவில் இறக்குமதியாகின்றன. கோதுமை, நெல், காப்பிக்கொட்டை, தேயிலை, சணல், தோல், பஞ்சு, வேர்க்கடலை முதலியவை நம் நாட்டிலிருந்து வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

வாணிபஞ் செய்பவர்கள் சில நீதிகளைக் கடைப்பிடிக்க வேண்டும். சரக்குகளை வாங்கி விற்பவர்கள் முதல் விலையோடு சிறிது லாபம் சேர்த்து விற்பதுமுறையாம். ஒரே பொருளுக்கு வியாபாரிகள் இரண்டு மூன்று விலைகள் சொல்லுவதும், வாங்குவோர் விலையைக் குறைத்துக் கேட்பதும் நமது நாட்டிலுள்ள ஓர் கெட்ட பழக்கம் ஆகும். கருரான ஒரே விலைக்கு எவருக்கும் விற்கும் நாணயமான வியாபார முறையை அநுசரிப்பது நலம்.

கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக நடத்தும் வியாபாரம் நல்ல ஊதியமளிக்கும். அவைகளிற்

சேரும் ஜனங்கள் ஒவ்வொருவரும் சொற்ப முதற் பணமளித்துச் சரக்குகள் உண்டாகு மிடத்திலிருந்து அவைகளை வரவழைத்து, அதிக விலையின்றி விற்று லாபத்தைத் தங்களுக் குள் பங்கிட்டுக் கொள்ளலாம். தாங்கள் விளை விக்கும் பொருள்களையும் ஒருங்கு சேர்த்து இதர இடங்களுக்கு எளிதாக அனுப்பிவிற்பனை செய்யலாம். இக் கூட்டுறவு வியாபாரத்தினால், விற்பதிலும் வாங்குவதிலும் ஒரு வியாபாரிக்கே ஏற்படும் அதிகச் செலவும்லாபமும், சங்கத்தின் அங்கத்தினர் பலராலும் பங்கிட்டுக் கொள்ளப் படுகிறது. ஆதலால் இவ்விதச் சங்கங்களை அமைத்து, அவற்றின் மூலமாக வாணிபம் நடத்துவது நமது நாட்டில் பரவ வேண்டும்.

'திரைகடலோடியும் திரவியம் தேடு'

சொல் விளக்கம் :—எஞ்சிய = மீதியாகவுள்ள. கிருஷிகன் = வேளாளன். முதுமொழி = பழமொழி. திரைகடல் = அலைகள் வீசும் கடல்.

கேள்விகள் :—

1. பண்டமாற்றல், பொருள் மாற்றல், உள் நாட்டு வியா பாரம், வெளி நாட்டு வியாபாரம், ஏற்றுமதி, இறக்கு மதி—இவைகளை விளக்குக.
2. கூட்டுறவு முறையில் வியாபாரம் செய்வதால் ஏற்படும் நன்மைகள் யாவை?
3. வியாபார முறையில் நாம் அநுசரிக்க வேண்டிய நீதிகள் யாவை?

10. கடன் சீட்டு

1935-ம் ௵ ஆகஸ்டு ௴ 24௳ தஞ்சாவூர் மேலை வீதியிலிருக்கும் மாணிக்க முதலியார் குமாரர் சிதம்பர முதலியார் அவர்கட்கு, மன்னார்குடி தாலூக்கா பூவனூர்க் கிராமத்திலிருக்கும் சுப்பிரமணிய பிள்ளை குமாரன் நடராஜ பிள்ளை எழுதிக் கொடுத்த பிராமிசரி நோட்டு.

மாதம் ஒன்றுக்கு நூறு ரூபாய்க்கு வட்டி ரூபாய் முக்கால் வீதம் கூடிய வட்டி முதல் தொகையைத்தங்களுக்காவது, தங்கள்உத்தரவு பெற்றவர்களுக்காவது வேண்டும் பொழுது கொடுப்பதாகச் சம்மதித்து, எனது மகனின் கலியாணத்திற்காகத் தங்களிடத்தில் நான் கடனாக ரொக்கம் பெற்றுக்கொண்டது ரூ. 300. இந்த ரூபாய் முன்னூறுக்கும் எழுதியதுள்பட

ரிவினியூ	ரிவினியூ
ஒரு அணா	ஒரு அணா
சு. நடரா	ஜபிள்ளை.
ஸ்டாம்பு	ஸ்டாம்பு

சாட்சிகள் :—

1. தஞ்சாவூர் மேலை வீதியில் வசிக்கும் துரைசாமி ஐயங்கார் குமாரன், ராமசாமி ஐயங்கார் அறிவேன்.

2. தஞ்சாவூர் வடக்கு வீதியிலிருக்கும் விசுவநாதய்யர் குமாரன், வெங்கடராமய்யர் அறிவேன்.

11. உலகச் சிறுவர்கள்

உலகத்தாய் :—என் அருமைக் குழந்தைகளே! முந்திய நூற்றுண்டுகளில் பல்வேறு நாடுகளிலுள்ள உங்கள் முன்னேர் அனைவரும் ஒருங்கு கூடுவதற்கு வசதிகள் இல்லாமல் தனித்து வாழவேண்டியிருந்தது. ஒரு நாட்டினர் இதர நாட்டினர்களைச் சந்தித்து நேரில் அறிமுகம் செய்து கொள்வதற்கு இயலாமல் புத்தகங்கள் மூலமாகவே அறிந்து வந்தனர். நீங்கள் நல்ல அதிர்ஷ்டமுள்ள காலத்தில் வசிக்கிறீர்கள். இப்பொழுது புகைவண்டிகளும், மோட்டார் வண்டிகளும், பெரிய நீராவிக் கப்பல்களும், ஆகாய விமானங்களும் ஏற்பட்டு, பூமியின் ஒரு பாகத்திலுள்ளவர்களை மற்றப் பாகங்களுக்கு விரைவில் கொண்டுபோய்ச் சேர்க்கின்றன. ஆகையால் நீங்கள் அனைவரும் ஒருங்கு கூடுவதற்குச் சந்தர்ப்பம் வாய்த்துள்ளது. பல்வேறு நாட்டினர்களாகிய நீங்கள் உங்கள் தேசத்தைப் பற்றியும் நாட்டினரைப் பற்றியும் எடுத்துக் கூறி ஒருவரோடொருவர் நட்புக் கொள்வீர்களாக!

சீன தேசச் சிறுவன் :—இந்தியாவுக்கு வடக்கிலுள்ள சீன தேசத்திலிருந்து நான் வந்திருக்கிறேன். நாங்கள் மஞ்சள் நிற

மானவர்கள். பழக்க வழக்கங்களில் விசித்திரமாகக் காணப்பட்டாலும், மிகப் பழைமையான காலத்தில்கூட நாங்கள் சீரும் செல்வமும் பெற்று வாழ்ந்து வந்தோம். எங்கள் தேசத்தை நாங்களே ஆட்சி செய்து வருகிறோம். வியாபார ஸ்தலங்களாகச் சில பட்டணங்களை இதர தேசத்தவர்க்கு அளித்துள்ளோம்.

பெரிய நதிகள் பாயும் கிழக்குப் பிரதேசத்தில் ஏராளமான நெற் பயிர் செய்தும், மலைப் பிரதேசமாகிய மேற்குப் பாகத்தில் அபரிமிதமான தேயிலை விளைவித்தும், பட்டுப் பூச்சிகளை வளர்த்துப் பட்டு நூல் எடுத்தும் வருகிறோம். தேயிலை, பட்டு வஸ்திரம், பட்டாசுக் கட்டுகள் முதலிய பல பொருள்களையும் பிற நாடுகளுக்கு அனுப்பி வருகிறோம். தற்கால உலகப் போக்கை யறிந்து நவீன இயந்திரங்களையும் நாங்கள் இப்பொழுது செய்து வருகிறோம்.

பனி நாட்டுச் சிறுவன்:—மிகுந்த குளிரினால் தண்ணீர் உறைந்து ஏராளமான பனிக் கட்டிகள் மூடிக்கொண்டிருக்கும் துருவப் பிரதேசத்திலிருந்து வந்தவன் நான். எங்களை எஸ்கிமோ என்று அழைப்பார்கள். எங்கள் நாட்டில் வருஷத்தில் ஆறுமாதம் பகலாகவும், ஆறு மாதம் இரவாகவும் இருக்கும். பகற்காலத்திற்கூடச் சூரிய உஷ்ணமும், வெளிச்சமும் மிகக் குறைவாகவே யிருக்கும். இராக் காலமாகிய ஆறு மாதமும் ஒருவித மின்னல் போன்ற வெளிச்சம் உண்டு.

குளிர் அதிகமாயும் பனிக்கட்டியால் மூடப்பட்டு மிருப்பதால் எங்கள் தேசத்தில் பயிர் பச்சைகள் ஒன்றும்விளைவதில்லை. ஒருவிதப் பாசிச்செடி மட்டுமேவளரும். அவைகளைச் சிலர் புசிப்பார்கள். கலைமான், வெள்ளைக் கரடி, ஸீல் என்னும் ஒருவித நீர்ப்பிராணி இவைகளை வேட்டையாடி, அவைகளின் மாமிசத்தை உண்டும், கரடித் தோலை ஆடைகளாக உபயோகித்தும் வருகிறோம். பனிக் கட்டிகளைக் குடைந்து குகைபோல் அமைத்துள்ள வீடுகளில் நாங்கள் வாசஞ் செய்கிறோம். கலைமான்கள் கட்டிய சக்கரமில்லாதவண்டிகளில்பனிக்கட்டியின் மேற் பிரயாணஞ் செய்வது எங்கள் வழக்கம்.

பிரான்ஸ் தேசத்துச் சிறுமி :—நான் ஐரோப்பாக் கண்டத்திலுள்ள பிரான்ஸ் தேசத்துச் சிறுமி. பிரெஞ்சுக்கார ரெனப்படும் நாங்கள் பேசுவது பிரெஞ்சு மொழியாகும். நாங்கள் சுத்தம், சுறு சுறுப்பு, மரியாதை, உல்லாசம் முதலிய குணங்கள் வாய்ந்தவர்கள். நாகரிகத்திலும், செல்வத்திலும், வீரத்திலும், வியாபாரத்திலும், நாங்கள் முன் அணியிலிருக்கிறோம்.

எங்கள் நாடு நிலவள நீர்வளங்களும், பலவித இயற்கைக் காட்சிகளும் அமைந்த அழகான தேசம். உலகத்தில் வேறு சில நாடுகளும் எங்களுக்குச் சொந்தமாக வுண்டு. இந்தியாவில் புதுச்சேரி, காரைக்கால் முதலிய இடங்களில் எங்கள் தேசத்தாரைக் காணலாம். மன்னரில்லாமலே பிரதிநிதிகள் மூலமாக எங்கள் தேசத்தை ஆண்டு வருகிறோம். இவ்வித ஆட்சிக்குக் குடியரசு என்று பெயர்.

எகிப்து தேசச் சிறுவன் :—ஆப்பிரிக்காக் கண்டத்தின் வட பாகத்திலுள்ள எகிப்து தேசத்

தைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். நான் அத்தேசத்தைச் சார்ந்தவன். நாங்கள் பெரும்பாலும் மகமதியர்களே. எங்கள் மன்னர் பொது ஜனங்களின் விருப்பப்படி ஆட்சி புரிபவர்; ஆங்கிலேயருடன் நட்புக் கொண்டவர்.



எங்கள் நாட்டில் 'நைல்' நதி பாய்வதால் தானியங்களும், பருத்தியும், பழ வர்க்கங்களும் ஏராளமாக விளைகின்றன. மிகப் பழமையான காலத்திற்கூட நாகரிகமும் நன்மதிப்பும் பெற்று எங்கள் நாடு விளங்கியது. அக்காலத்தில் கட்டப்பட்ட கூர் நுனிக் கோபுரம் என்னும் விசித்திரமான கட்டடங்களை இன்றும் காணலாம்.

ஆஸ்திரேலியாக் கண்டத்துச் சிறுவன்:—ஆஸ்திரேலியாக் கண்டத்திலிருந்து வந்துள்ள நான் அங்கே ஆதியில் குடியேறிய ஆங்கிலேயர் வம்சத்தைச் சேர்ந்தவன். நாங்கள் பேசும் மொழி ஆங்கிலம். நடையுடை பாவனைகளில் நாங்கள் ஆங்கிலேயரைப் போன்றவர்கள். எங்கள் தேசம் பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியத்தி லடங்கியது. என்றாலும், பிரதிநிதிகள் மூலமாகவே ஆட்சி செய்யப் பட்டு வருகிறது.



எங்கள் கண்டத்தில் சில பாகம் மட்டுமே நிலவளம், நீர் வளம் மலிந்து செழிப்பாக விருக்கும். பெரும்பான்மையான பாகங்கள் அதிக உஷ்ணமுள்ள நீரற்ற மணல் வெளி. இங்குக் கங்காரு என்னும் ஒருவிநோதப் பிராணியைக் காணலாம். எமது நாட்டில் தங்கச் சுரங்கங்கள் அதிகம். கோதுமை, கம்பளி, பழ வர்க்கங்கள் முதலியவை அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

செவ்விந்தியச் சிறுவன்:—நான் அமெரிக்காக் கண்டத்தில் உள்ள புராதனக் குடிகளாகிய செவ்விந்தியர்களில் ஒருவன். முற்காலத்

தில் நாங்கள் காடுகளில் அலைந்து திரிந்து

வேட்டையாடி ஜீவிக்கும் முரட்டு ஜாதியராக வாழ்ந்து வந்தோம். இப்பொழுது இதர ஜனங்களுடன் பழகி நாகரிகம் பெற்றுப் பல தொழில்கள் செய்துவருகிறோம்.

உலகத்தாய்:—குழந்தைகாள்! இங்கிலாந்து, ஜப்பான், தென்னாப்பிரிக்கா, தென் அமெரிக்கா, இதாலி, ஜெர்மனி, ருஷியா முதலிய நாடுகளிலிருந்தும் வந்திருக்கிற நீங்களும் இவர்களுடன் கூடி அனைவரும் உலகமக்கள் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கூட்டுறவுடன் பழகி உலக க்ஷேமத்தையும், சமாதானத்தையும் நிலை நிறுத்துமாறு முயற்சிப்பீர்களாக!

சொல் விளக்கம்:—நூற்றாண்டு=நூறு வருஷங்கள் கொண்ட காலம். நவீன=புதிதான. துருவப் பிரதேசம்=பூமியின் வடக்கு அல்லது தெற்குக் கோடியிலுள்ள இடம். முன் அணியில்=முதல் வரிசையில். புராதனம்=பழைமை. போதிய=போதுமான.

கேள்விகள் :—

1. இக்காலத்தில் ஏற்பட்டுள்ள பிரயாண வசதிகள் யாவை?
2. பின்வரும் வாக்கியங்களைக் கூறுபவர் எத்தேசத்தவர்?
   (i) நான் சக்கரமில்லாத வண்டிகளில் பிரயாணஞ் செய்கிறேன்.
   (ii) எங்களது அரசாட்சி "குடியரசு" எனப்படும்.
3. உலகத்தாய் கூறிய புத்திமதி யாது?

12. கடவுளின் மாண்பு (பாட்டு)

(1) அங்கும் இங்கும் அழகாகி
அளவு இல்லாத உயிராகி
அங்கும் இங்கும் அறிவாகி
அறிவுக் கெட்டா அற்புதமாய்த்
தங்கி விளங்கும் பேரொளியாய்
தானே உலகாய் நிறைந்தவரார்?
எங்கும் தங்கும் கடவுளவர்
என்னுள் உணர்வில் படுகின்ருர்.

(2) வண்ண மலரின் இதழ் ஆக்கி
வண்டை மபக்க நிறந் தீட்டி
வண்ண மலரில் மணமிட்டு
வடித்த செந்தேன் துளியிட்டு
விண்ணில் திரியும் பறவைகளின்
விரிந்த சிறகில் உயிரிட்டு
மண்ணை விண்ணைச் செய்தவரார் ?
மனத்திற் கெட்டாப் பகவனடி.

(3) விண்ணை முட்டும் குன்றுகளை
விரைந்து பாயும் ஆறுகளைக்
கண்ணைக் கவரும் பேரழகாய்க்
காலை மாலை ஒளி வீசி
மண்ணில் நாளும் உதித்தணைந்து
மனத்தைக் கவரும் கதிரவனை
எண்ண எண்ண என் உள்ளம்
என்றும் உருகும் ஈசனுக்கே.

சொல் விளக்கம் :—பேரொளி=பெரியஜோதி. உள்=மனம். உணர்வு=அறிவு. வண்ணம்=அழகு. தீட்டி=எழுதி. பகவன்= கடவுள். கதிரவன்=சூரியன்.

13. டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள்

ஆதிகாலம் முதல் நமது தமிழ் நாட்டில் பெரியார் பலர் தோன்றி அமிழ்தினும் இனிய தமிழ் மொழியில் வல்லவர்களாய்ப் பல நூல்கள் இயற்றியும், ஆராய்ச்சி செய்தும் தமிழன்னைக்குச் சீரிய தொண்டு புரிந்து வந்துள்ளார்கள். அப் பெரியார்களின் வரிசையில் வைத் தெண்ணத்தகும் பெருமை வாய்ந்தவர் நமது உயர் திருவாளர் உ. வே. சாமிநாதையர் அவர்கள். இவர், பண்டைத் தமிழ் நூற் சுவடிகளை ஊர்தோறும் சென்று தேடி ஆராய்ந்து அச்சிட்டும், அரிய சில நூல்களுக்கு உரையெழுதியும், ஆயிரக் கணக்கான மாணவர்களுக்குத் தமிழ்ச் சுவை யூட்டிக் கற்பித்தும் உலகம் போற்றுமாறு தமது பெரும் புகழை நிலை நாட்டி யுள்ளார்.

நமது ஐயரவர்கள் தஞ்சாவூர் ஜில்லாவைச் சேர்ந்த பாபநாசத்திற்கு அருகிலுள்ள உத்தமதானபுரம் என்னும் சிற்றூரில் 1855-ம் ஆண்டு அவதரித்தனர். இவரது தந்தையார் வேங்கட சுப்பிரமணிய ஐயர்; தாயார் சரசுவதி அம்மாள். தந்தையார் சங்கீதத்தில் சிறந்த பாண்டித்தியமும், சீரிய ஒழுக்கமும், தெய்வ பக்தியும் உள்ளவர். ஐயரவர்கள் திண்ணைப் பள்ளிக்கூடக் கல்வி பயின்ற பிறகு, தமது பிதாவினிடம் சதகம்

முதலிய சிறு நூல்களைக் கற்றும், சங்கீதத்தை அப்பியசித்தும் வந்தனர். அதன்பின் அப் பக்கங்களிலிருந்த சில பண்டிதர்களிடம் தமிழ் இலக்கிய இலக்கணங்களைக் கற்று வந்தனர். கற்கக் கற்க இவருக்குக் கல்வி யவா அதிகரித்துக் கொண்டே வந்தது.

அக் காலத்தில் மாயவரத்தில் மீனாட்சி சுந்தரம் பிள்ளை என்ற மகா வித்துவான் வாழ்ந்து வந்தார். அவரிடம் நமது ஐயரவர்களைத் தந்தையார் அழைத்துச் சென்று, தமது புதல்வர்க்கு உயர்தரத் தமிழ் நூல்களைப் போதித் தருளுமாறு வேண்டிக்கொண்டனர். பதினாறு வயதுள்ள புதிய மாணவரது மதி நுட்பத்தையும், எளிதில் விஷயங்களைக் கிரகித்துக் கொள்ளும் வன்மையையும் அறிந்து இவ்வுத்தம மாணாக்கருக்குப் பாடங் கற்பிக்க மகா வித்துவான் இசைந்தனர். பிள்ளையவர்களிடம் பாடங் கேட்கும் முறையில் நின்று தலை மாணவராய் ஸ்ரீமான் சாமிநாதையரவர்கள் விளங்கினார்கள்.

பெருநிதி படைத்த ஒரு சைவ மடம் திருவாவடுதுறையில் இப்பொழுதும் இருக்கிறது. அந்த மடாதிபதிகள் தமிழ் வித்துவான்களைப் பெரிதும் ஆதரிப்பவர்கள். அந்த மடத்து ஆதீன வித்துவானாகிய மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை யவர்கள் காலஞ்

சென்ற பிறகு நமது ஐயரவர்கள் அந்த ஸ்தானத்தில் அமர்ந்தனர். இந்த மடத்துப் புத்தக சாலையிலிருந்த புராதனமான தமிழ் ஏடுகளைப்பரிசோதித்து அச்சிட ஆவல் கொண்டிருந்தனர்.

பின், 1880-ம் ஆண்டில் கும்பகோணம் சர்க்கார் கலாசாலையில் தமிழ்ப்பண்டிதராகப்பலரது வேண்டுகோளின்படி நியமிக்கப்பட்டனர். அருமையாகப் போதிக்கும் திறமை வாய்ந்த நமது ஐயரவர்கள் தமிழ்ப் பாடல்களை இனிமையாய் வாசித்து, கருத்துக்களை மாணுக்கரது மனத்தில் பதியும்படி தெளிவாக விளக்குவதில் நிகரற்றவர். ஆகையால், இவர் வகுப்பில் மாணவர்கள் மிக்க ஆவலுடன் பாடங்களைக் கவனிப்பது வழக்கம். கலாசாலைத் தலைவராக அப்பொழுது இருந்த ஸ்ரீமான் கோபால ராவ் அவர்கள்கூட இவர் பாடஞ்சொல்வதைக் கேட்டு மகிழ்வதுண்டு.

பிறகு 1903-ம் ஆண்டில் சென்னை இராஜதானிக் கலாசாலைக்குத் தமிழ்ப் பேராசிரியராக மாற்றப்பட்டனர். இவரது திறமையை அங்குள்ள மாணவரும், மற்றவரும், அரசாங்கத்தாரும் பெரிதும் கொண்டாடினர்கள். இவ்வாறு சுமார் நாற்பது ஆண்டுகள் சர்க்கார் உத்தியோகத்திலிருந்து 1919-ம் ஆண்டில் நமது ஐயரவர்கள் உபகாரச் சம்பளம் பெற்று விலகினர்கள்.

உபகாரச் சம்பளம் பெற்ற பிறகும் சாமி நாதையரவர்கள், சிதம்பரத்தில் ராஜா ஸர் அண்ணுமலை செட்டியார் ஏற்படுத்திய தமிழ்க் கலாசாலையில் தலைவர் பதவியை ஏற்றுக்கொண்டு 1924 முதல் 1927-ம் ஆண்டு வரையில் அமர்ந் திருந்தனர். தமது முதுமைக் காலமாகிய இப் பொழுதும் தமிழ் மொழி வளர்ச்சிக்காக அரும் பெரும் பாடுபட்டு உழைத்து வருகின்றனர். தமிழ் மொழியில் தமக்கு ஒப்பாரும் மிக்காரு மில்லாத இப் பெரியார் அடக்கம், பொறுமை, பேசுந்திறமை, யாவரிடமும் அன்புடன் பழகு தல் முதலிய பல அரும் பெருங் குணங்கள் ஒருங்கே அமையப் பெற்றவர்.

இதற்கு முன்பு மிகப் பழைமையான தமிழ் நூல்கள் எல்லாம் ஓலைச்சுவடிகளாகவே இருந் தன. அவற்றைத் தேடிப் பழைய வித்துவான் கள் வசித்திருந்த ஊர்களுக்கெல்லாம் சென்று சென்று அங்கங்குச் செல்லரித்துக் கிடந்த ஏட்டுச் சுவடிகளைச் சேகரித்து அவற்றை நல்ல முறையில் அச்சிட்டுப் பல ஆராய்ச்சிக் குறிப் புக்களோடும் வெளியிடுவதில் நமது தமிழ்ப் பெரியார் எடுத்துக்கொண்ட பெருமுயற்சியும் பிரயாசையும் அளவிறந்தன. சீவக சிந்தாமணி, பத்துப் பாட்டு, சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய பண்டைக்கால நூல்களை முதன் முதல் அச்சிட்டு வெளியிட்டவர் நமது ஐயரவர்களே.

இப்புத்தகங்களின் வெளியீட்டினால் தமிழின் பெருமையை உலகம் அறிவதாயிற்று. தமது ஆசிரியர் மீனாட்சிசுந்தரம் பிள்ளை யவர்களது சரித்திரத்தையும், மற்றும் சில வசன நூல்களை யும் இவர்கள் எழுதியுள்ளார்கள்.

ஐயரவர்கள் தமிழுலகத்துக்குச் செய்துள்ள நன்மைகளை யுணர்ந்த துரைத்தனத்தார் 1905-ம் ஆண்டில் ஒரு சிறு பரிசாக ஆயிரம் ரூபாயையும், 1906-ம் ஆண்டில் "மஹாமஹோபாத்தியாயர்" என்னும் பட்டத்தையும் இப்பெருந்தகையாருக்கு அளித்தார்கள். 1932-ம் ஆண்டில் சென்னைச் சர்வகலாசாலையின் ஆதரவில் "டாக்டர்" என்னும் பட்டமும் இவருக்கு வழங்கப்பட்டது.

மாணவர்களே! மஹாமஹோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்களைப்போல் நீங்களும் தாய் மொழியாகிய தமிழ்மொழியில் ஆர்வங்கொண்டு அவர்கள் வெளியிட்ட நூல்களை முறையாகக் கற்றுத் தமிழுக்கு உழைக்க முன் வருவீர்களாக!

சொல் விளக்கம்:—அமிழ்தினும் = தேவாமிர்தத்தினும். தொண்டு = பணிவிடை. அவா = ஆசை. சர்வகலாசாலை = யூனிவர்ஸிடி. இலக்கியம் = செய்யுளும் வசனமும். நிகரற்றவர் = ஒப்பற்றவர். வெளியீடு = பிரசுரங்கள்.

கேள்விகள்:—

1. ஐயரவர்கள் இயற்றிய தமிழ்த் தொண்டு யாது?
2. இவர் வெளியிட்டுள்ள சில பண்டைத் தமிழ் நூல்களின் பெயர்களைச் சொல்.

———

14. இரத்தினங்கள்

ஆபரணங்கள் செய்வதற்கான அழகு வாய்ந்த கல் 'இரத்தினம்' எனப்படும். அது எவ்வளவு பிரகாசமாகவும், நல்ல வர்ணமாகவும் இருக்கிறதோ, அவ்வளவு அதிக விலையுள்ள தாகும். இவ்வித இரத்தினங்கள் ஒன்பது வகைப்படும். அவை வைரம், பதுமராகம், மரகதம், நீலம், கோமேதகம், புஷ்பராகம், வைடூரியம், பவளம், முத்து என்பனவாம். இவை ஒன்பதும் நவரத்தினங்கள் அல்லது நவமணிகள் என்று சொல்லப்படும்.

நவரத்தினங்களிற் சிறந்தது வச்சிரம் அல்லது வைரம். இது பார்வைக்கு வெண்மை நிறமாகத் தோன்றியபோதிலும், வானவில்லிற் காணும் ஏழு நிறங்களையும் மாறி மாறிக் காட்டும் தன்மையது. இக்குணம் பற்றியே இதற்கு ஏனைய இரத்தினங்களை விட விலை யதிகம். ஒரு காரட் அல்லது 4 நெல் எடையுள்ள ஒரு சிறு வைரக்கல் ஐந்நூறு ரூபாய்க்கு மேலான மதிப்புள்ளது.

இந்தியாவின் சில பாகங்களிலும், தென் னாப்பிரிக்காவிலும், தென் அமெரிக்காவிலும் வைரக் கனிகளிருக்கின்றன. சுரங்கங்களி லிருந்து எடுக்கப்படும்பொழுது வைரம் மங்க லான ஒளியுடைய கூழாங்கல்லைப் போலிருக்கும்.

கமலப் பட்டைகள் தேய்த்து வேலைசெய்த பின்பே, அது அதிகக் காந்தி பெறும்.

சிவப்பு, மஞ்சள், கறுப்பு வர்ணங்கள் கலந்த வைரங்களும் உண்டு. அவற்றில் வெண்மையாயும் சுத்தமாயு மிருப்பதுதான் சிறந்தது. அவ்வித வைரம் நல்ல நீர் ஓட்டம் உள்ளதாகக் கூறப்படும். உலகத்திலுள்ள வஸ்துக்களிலெல்லாம் வைரந்தான் அதிகக் கடினமானது. ஆதலால் கண்ணுடியை வில்லையாக அறுக்க வயிரத் தூள் பதித்த ஊசியை உபயோகிப்பார்கள். வைரத்தை நெருப்பில் காட்டினுல் அது கருகிக் கரியாகும். ஆதலால் வைரங்கள் கரித் துண்டுகளே. கரிக்கட்டி மிக்க சிலுசிலுப்பும், விலேயும், மதிப்பும் கொண்ட வைரமாக மாறித் தோன்றுவது ஆச்சரியமல்லவா ?

சிவப்பு நிறமுள்ள இரத்தினம் பதுமராகம் ஆகும். இதற்கு மாணிக்கம், கெம்பு, சிவப்பு என்ற பெயர்களுமுண்டு. மரகதம் என்பது பச்சை நிறமுள்ள இரத்தினம். இதற்குப் பச்சை என்றும் பெயருண்டு. நீல நிறமான இரத்தினம் நீலம் எனப்படும். மஞ்சள், சிவப்பு, வெண்மை மூன்றும் கலந்த இரத்தினம் கோமேதகம் எனவும், மஞ்சள் கலந்த வெண்மையான இரத்தினம் புஷ்பராகம் எனவும், பளபளப்புடன்கூடிய சாம்பல் நிறத்தில்

பச்சை அல்லது சிவப்புக்கோடுகளுள்ள இரத்தினம் வைடூரியம் எனவும் கூறப்படும்.

பவளமானது பல கோடிச் சிறு பூச்சிகள் சேர்ந்து ஆழமான கடலில் உண்டாக்கும் ஒரு வஸ்து. இந்த வஸ்துவுக்குப் பவளப் பாறை என்று பெயர். இப்பாறைத் துண்டுகளை யுடைத்தெடுத்துப் பவளமாக வேலை செய்கிறார்கள். நற்பவள மாலையை நமது நாட்டுப் பெண்டிர் கழுத்தில் அணிந்துகொள்வார்கள்.

முத்துச் சிப்பி என்னும் ஒருவித நத்தையில் முத்து உண்டாகிறது. கடலின் ஆழத்தில் வசிக்கும் சிப்பிகள், சில தருணங்களில் நீர் மட்டத்திற்கு மேல் வந்து தமது கிளிஞ்சலைத் திறக்கும்பொழுது, ஒரு விதப் பொடி மணல் அதன் வயிற்றுட் புகுந்து எரிச்சலை உண்டாக்கும். எரிச்சலைப் பொறுக்க முடியாத சிப்பி, ஒருவித வெண்மையான நீரை வெளிவிட்டு அந்த மணலை மூடும். இந்த நீர் உறைந்து முத்து ஆகிறதென்று கூறுவர். 'முத்துச் சிப்பியின்



வயிற்றில் மழைத் துளி ஒன்று விழுந்து, அத்துளியே உறைந்து முத்தாகிறது என்றும் சிலர் சொல்லுகிறார்கள். ஆழத்தில் பாறைகளில் தொத்திக் கொண்டிருக்கும் முத்துச் சிப்பிகளை முத்துக் குளிப்பவர்கள் மூழ்கி எடுப்பார்கள்.

இக்காலத்தில் போலி இரத்தினங்கள் தலைப்பட்டுவிட்டன. இவை ஜெர்மனி முதலிய தேசங்களில் பல நிறங்களிலும் செயற்கை வகையில் செய்யப்படுகின்றன. இவை விலை சரசமாகக் கிடைப்பதால், நமது நாட்டில் பலரும் இவற்றை வாங்கி, நகைகள் செய்து அணிந்து கொள்ளுகிறார்கள். நன்முத்து, நற்பவளம் இவைகளைப் போலத் தோன்றும் போலி முத்துக்களும் பவளங்களும் கூட ஏற்பட்டுள்ளன. இதனால் உண்மையான இரத்தினங்களைப் பார்த்தறிவது மிகவும் கஷ்டமாகவிருக்கிறது. இது விஷயத்தில் நாம் ஏமாறாமல் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

சொல் விளக்கம் :—நவம்=ஒன்பது. ஏனைய=இதர. கமலப் பட்டைகள்=தாமரை இதழ்கள் போன்ற பக்கங்கள். காந்தி=ஒளி. போலி=வெளிப்பார்வைக்கு மாத்திரம் ஒரு பொருளைப் போலத் தோன்றுவது.

கேள்விகள் :—

1. நவ ரத்தினங்கள் யாவை?
2. வைரத்தின் குணவிசேஷங்களைக் கூறுக.
3. முத்து எவ்வாறு உண்டாகிறது?

15. சக்கரவர்த்தியும் கடைக் காரியும்

அநேக ஆண்டுகளுக்கு முன் பிரான்சு தேசத்தின் ஒரு சிறிய பட்டணத்தில் மூதாட்டி ஒருத்தி பழக்கடை ஒன்று வைத்து ஜீவனம் செய்து வந்தாள். அவளது கடையின் எதிரில் ஓர் இராணுவக் கலாசாலை இருந்தது. அதில் பயின்று வந்த அந்நாட்டுச் சிறுவர்கள், தங்களுக்கு வேண்டிய கனி வர்க்கங்களை இக்கடையிலேயே வாங்குவர். இதனால் வியாபாரம் நன்கு நடைபெற்று, அதிக ஊதியமும் அவளுக்குக் கிடைத்து வந்தது.

இக்கடையில் வழக்கமாகப் பழங்கள் வாங்கும் சிறுவர்களில் ஒருவன், அக் கிழவியிடம் அதிகப் பழக்கம் பெற்று, ஓய்வு நேரங்களில் அங்கு வந்து அவளுடன் பேசிக்கொண்டிருப்பான். ஒரு நாள் அவள், “அருமை வாலிபனே! நீ பெரியவனானதும் என்ன உத்தியோகம் வகிக்கப்போகிறாய்?” என்று அவனை வினவினாள்.

வாலிபன் :—போர்வீரனாவதற்குப் பயின்று வருகிறேன். எனினும் வாழ்நாள் முழுவதையும் சாதாரணப் படைவீரனாகவே கழிக்கேன்.

கடைக்காரி :—சாமானியப் படைவீரனாவதிலும், ஓர் உயரிய படைத்தலைவனாக வருதற்கு முயல்வது நலமன்றோ?

வாலிபன் :—ஆமாம். நான் தீரத்துடனும் வீரத்துடனும் உழைத்து ஒரு சிறந்த தளகர்த்தனாக வருவதை நீங்கள் பார்க்கலாம்.

கடைக்காரி ;—ஆ! அவ்வித உன்னத பதவி கிடைத்தால், இந்த எளிய கிழவியின் நினைப்புச் சற்றேனும் உன் மனத்திற்கு வருமா?

வாலிபன் :—உங்களை ஒருகாலும் மறவேன். அது பின்பு தெரியும். எனக்குச் சில பழங்கள் வேண்டும். இன்று என் கையில் பணமில்லை. கிடைத்ததும் கொடுத்து விடுகிறேன்.

கடைக்காரி :—அப்படியே. நீ சொன்ன சொல் தவருய் என்பது எனக்குத் தெரியும்.

பயிற்சி முடிந்து, அச் சிறுவன் கலாசாலையை விட்டு நீங்கிச் சேனையில் சேரும் சமயம் வந்தது. அவன், அம் முதியாள் பாற் சென்று, "தாயே! தங்களுக்கு நான் தரவேண்டிய சில்லறையைப் பின்னர் அனுப்புவேன். தங்கள் நன்றியை என்றும் மறவேன்" என்ருன்.

கடைக்காரி :-சில்லறையைப்பற்றி நீ கவலைப்பட வேண்டாம். சௌக்கியமாகப் போய் வா. கடவுள் உன்னை ஆசீர்வதிப்பார். ஒரு நாள் என்றைக்கேனும் பெரும் புகழ்பெற்று உயர்ந்த உத்தியோகம் வகிப்பாயாக!

சிறுவன் ராணுவத்தில் சேர்ந்து பல ஆண்டுகள் சென்றன. காலக்கிரமத்தில், தனது திறமையினாலும் தீரத்தினாலும் படிப் படியாகப் பல உயா பதவிகள் பெற்று, பின்னர் பிரெஞ்சு சைனியங்கள் எல்லாவற்றிற்கும் சேனாதிபதியாகும் பதவியையும், முடிவில் பிரானசு நாட்டிற்கே சக்கரவர்த்தியாகும் பெரும் பதவியையும் பெற்று விளங்கினான்.

இவன் யார் தெரியுமா? ஐரோப்பாக் கண்டம் முழுமையும் ஜெயித்து வெற்றிக்கொடி நாட்டிய 'நேபோலியன்' என்னும் மகாவீரனே.

நெடு நாளைக்குப் பின் ஒரு நாள் சக்கர



வர்த்தி, தான் இளமையிற் பயின்ற இரா ணுவக் கலாசாலையைப் பார்வையிட அந்நகரத்

திற்கு வர நேர்ந்தது. அப்பொழுது முந்திய பழக்கடையின் ஞாபகம் வரவே, அவளிட மிருந்த விசுவாசத்தினுல் "அந்த வயது முதிர்ந்த பழ வியாபாரி இவ்வளவு காலம் ஜீவித்திருக்க மாட்டாள். எனினும் அந்த இடத்தையாவது போய்ப் பார்த்துவரலாம்" என்று நினைத்து அம்மன்னுதி மன்னன், சாதாரண உடையுடன் கால் நடையாக வந்து பழக்கடையை அடைந்தான்.

அதிர்ஷ்டவசமாய் அதுவரை ஜீவித் திருந்த அந்த நரை மூதாட்டி, தன் மூப்பின் முதிர்வால் எதிரில் நிற்பவனை இன்னுனென்று அறிந்து கொள்ள முடியவில்லை.

கடைக்கு வந்தவர் (பழங்கள் வாங்கிக்கொண்டு) :— அம்மே! இந்நகரத்திற்கு வந்திருக்கும் சக்கரவர்த்தியைத் தாங்கள் பார்த்தீர்களா?

கடைக்காரி :—இல்லை, ஐயா! எனது தள்ளாத வயதில் கூட்டத்தினிடையிற் சென்று, அவரை நான் எப்படிப் பார்ப்பது? ஆனுல், ஏற்கனவே அவரைப் பலமுறை பார்த்திருக் கிறேன்.

நேபோலியன் :—இந்த ஊருக்குச் சக்கர வர்த்தி முதன் முதலாக இன்றுதானே விஜயம் செய்திருக்கிருர். நீங்கள் அவரை எவ்வாறு பலமுறை பார்த்திருக்கக்கூடும்?

கடைக்காரி:—அவர் இங்குப் பயிலுங்கால், அடிக்கடி இக்கடைக்கு வந்து வார்த்தையாடிக் கொண்டிருப்பார்.

நேபோலியன்:—அவர் தங்கள் கடைக்கு ஏதேனும் பாக்கி தரல் வேண்டுமோ?

கடைக்காரி:—இல்லை. ஏதோ சொற்ப தொகை. அது பெரிதன்று. அக்காலத்தில் கூட, அவர் கண்ணியமும் யோக்கியமும் உள்ளவராகவே இருந்தார். என் கடையில் சாதாரணமாகப் பழகிவந்த சிறுவர், இப்பொழுது வேந்தர் பெருமானாக விளங்குவதைக் குறித்து நான் பெருமை பாராட்டுகிறேன்.

நேபோலியன்:—இதோ, பழைய பாக்கியைப் பெற்றுக்கொள்ளுங்கள். இங்கு நிற்பவன் அவன்தான். உங்களைப் பார்க்கும் பொருட்டே வந்துள்ளான்.

உடனே அவள் அம் மகா வீரனை யுற்று நோக்கி, அளவற்ற வியப்பும் மகிழ்ச்சியுங் கொண்டு ஆசீர்வதித்தாள். சக்கரவர்த்தியும் அவளுக்குப் பெருநிதி வழங்கி, அவள் மகனுக்குத் தன் இராணுவத்தில் ஒரு பெரிய உத்தியோகமுங் கொடுத்துத் தன் நன்றியைச் செலுத்தினன்.

"நன்றி மறவேல்"

சொல் விளக்கம்:—மூதாட்டி, நரை மூதாட்டி, முதியாள், முதியவள்=கிழவி. இராணுவக் கலாசாலை=போர் வீரர் பயிலும் கல்விச்சாலை. தளகர்த்தன், படைத் தலைவன்=சேனாதிபதி.

— —

16. கடிதம்

சென்னை,
6—1—1935.

எனது அருமை நண்ப,

நலம். அவ்விடத்திய நலம் அறிய அவா.

நான் ஜனவரிப் பண்டிகைக் காட்சிகளைக் காண இவ்விடம் வந்து மூன்று தினங்கள் ஆகின்றன. நீ ஆகாய விமானத்தைஇதுவரையில் நேரில் பார்த்ததுமில்லை, அதில் ஏறியதுமில்லை யல்லவா? அதுபற்றி நேற்றையதினம் நான் முதன் முதலாக ஆகாயப் பிரயாணஞ் செய்து அறிந்த புதுமைகளை உனக்கு விவரிக்கும் பொருட்டு இக்கடிதம் எழுதலானேன்.

பறங்கிமலைக்கு அருகிலுள்ள மீனம்பாக்கத்தில் ஆகாய விமானச் சங்கம் ஒன்று ஏற்படுத்தி விமானத் துறை யொன்றும் அமைத்திருக்கிறார்கள். இந்த விமானத் துறையில் ஆகாய விமானங்கள் வைப்பதற்கான கட்டடமும், அவைகள் தரையில் ஓடி இறங்குவதற்கான சமவெளியும் இருக்கின்றன. மேலும் கம்பியில்லாத் தந்திச் சாலை ஒன்றும் அருகிலிருக்கிறது.

நான் இந்த விமானத் துறைக்குச் சென்று அங்கிருக்கும் விமானங்களைக் கவனித்தேன்.

இங்குக் "கருட விமானம்" என்றும், "புஷ்பக விமானம்" என்றும் பெயருள்ள இரண்டு ஆகாய விமானங்கள் இருக்கின்றன இவ் விமானங்கள் இலேசான அலுமினியத் தகட்டினுல் செய்யப்பட்டவை. இவற்றின் இறகுகள் அசைவதில்லை; காற்றில் மிதப்பதற்கு மட்டுமே சாதகமாக உள்ளன. இவ் விறகுகளில் பெட்ரோல் எண்ணெய் வைக்கும் தொட்டிகள் இருக்கின்றன. விமானத்தின் முன்புறத்தி லுள்ள இயந்திரம் பெட்ரோல் எண்ணெ யின் ஆவியாகும் சக்தியினுல் விமானத்தை மேலே பறக்கச் செய்கிறது. மீன் வால் போலுள்ள சிறகு, காற்றைக் கொள்ளவும், தள்ளவும் ஏற்றவாறு அமைந்திருக்கிறது. விமானத்தின் அடியிலுள்ள சக்கரங்கள் அது மேலே எழு வதற்கு முன், தரைமேல் ஓடுவதற்கு உதவுகின் றன. இதை ஓட்டும் மாலுமியைத் தவிர, இருவர் உட்காருவதற்கு ஆசனங்கள் இடப் பட்டுள்ளன.

ஆகாயத்தில் பறந்து சென்னையைச் சுற்றிப் பார்த்து வரப் பத்து ரூபாய் கொடுத்து ஒரு பிரயாணச் சீட்டு நான் வாங்கினேன். விமானத்தின் ஓர் ஆசனத்தில் உட்காரச் செய்து, அத்துடன் சேர்த்து என்னை அரைப் பட்டையினுல் கட்டினுர்கள். பிறகு மாலுமி விசையை முடுக்கியதும், ஆகாய விமானம்

மெல்ல நகர்ந்து தரையில் சிறிது தூரம் ஓடிப் பின்பு மேலே எழுந்து உயரப் பறந்தது.

அப்பொழுது பூமி கீழே போவது போலத் தோன்றிற்று. ஆகா, என்ன வேகம்! கீழே பார்ப்பதற்கு அச்சமாக விருந்தது. என்றாலும் தைரியமாக இருந்தேன். கீழே இருந்த பெரிய கட்டடங்கள் எல்லாம் சிறிய குடிசைகளைப் போலவும், ஆறுகள் சிறு வாய்க்கால்களைப் போலவும் தென்பட்டன. சென்னையிலுள்ள பல காட்சிகளையும் ஏக காலத்தில் பார்க்கக் கூடியதாயிற்று. சென்னையில் கடற்கரை யோரமாக மைலாப்பூர், திருவல்லிக்கேணி இவை கட்டு மேலாக ஆகாயத்தில் பறந்து துறை முகம் வரையிற் சென்று, பிறகு திரும்பி ஜார்ஜ் டவுன், நுங்கம்பாக்கம், மாம்பலம், சைதாப் பேட்டை இவ்வூர்கள் வழியாக மீனம்பாக்கம் விமானத் துறைக்கு வந்து இறங்கினோம்.

மாலுமிக்கு எனது வந்தனத்தை யளித்து விட்டு, சென்னையில் நான் தங்குமிடத்திற்கு வந்து சேர்ந்தேன்.

வருகிற சனிக் கிழமை ஊர் திரும்புவேன்.

இங்ஙனம்

உனது அன்புக்குரிய நண்பன்

ம. கோபாலன்

17. தேக்கு மரம்



நமது வீடுகளிலும், பாடசாலைகளிலும், இன்னும் உத்தியோகசாலைகளிலும் உள்ள மேஜை, நாற்காலி, அலமாரி முதலிய சாமான்கள் தேக்கு மரத்தினால் செய்யப்பட்டவைகள். பெரிய வீடுகளிலுள்ள தூண்களும், உத்திரங்களும், நிலைக் கதவுகளும், மற்றும் பலவிதச் சாமான்களும் தேக்கு மரத்தினால் ஆனவைகளே. இம் மரத்தினால் செய்யப்படும் சாமான்கள் உறுதியாயும், வழவழப்பாயும், அழகாயும் இருக்கின்றன. இம்மரத்தில் ஒருவிதத் தைலம் இருப்பதால், இது உளுக்காமல் உறுதியாய் வெகு காலம் நீடித்திருக்கும். மேலும் எறும்பு, வண்டு, கறையான் முதலியவை இம் மரத்தை அரிப்பதில்லை. கணுக்களில்லாமலும், உட்பாகம் ஒரே சீராகவும் சமனாகவுமிருப்பதால், இது தச்சனுடைய ஆயுதங்களுக்கு எளிதில் இசைந்து வரும். இதனால் மா, பலா முதலிய மற்ற மரங்களைவிட இதற்கு விலை யதிகம்.

தேக்கு மரங்கள் சாதாரணமாகப் பெரிய காடுகளில் தான் உண்டாகும். அதிகமழை பொழி

யும் உஷ்ணப் பிரதேசங்களில் இவை செழித்துப் பெரிய விருட்சங்களாக வளர்கின்றன. அதிகக் குளிருள்ள இடங்களிலும், அதிக உயரமான மலைகளிலும் இவை பயிராவதில்லை.

தேக்கு மரங்களைப் பயிர் செய்பவர்கள், இவ்விதைகளைத் தண்ணீரில் சில நாட்கள் ஊற வைத்திருந்து, பின்பு எடுத்து விதைப்பார்கள். இரண்டு மூன்று வாரங்களில் அவை முளைத்து வெளிக் கிளம்பும். தேக்கஞ் செடிகள் சிறியவைகளாக இருக்கும்பொழுது விரைவாக வளரும். இள மரங்கள் அடியில் கிளைகளில்லாமல் நேராக வளர்ந்து, மேலே போகப் போகப் பல கிளைகளை விட்டு வளரும். ஒவ்வொரு மரமும் வளருவதற்கு இட விஸ்தாரம் அதிகம் வேண்டுமாகையால், இடையிடையே உள்ள இளமரங்களை அவ்வப்போது வெட்டி விடுவார்கள். அடிமரம் ஏழு அல்லது எட்டு அடி சுற்றளவுள்ளதாக வளரச் சுமார் நூறு வருஷங்கள் செல்லும். மிகவும் உயரமான மரங்கள் 150 அடி வரையில் வளர்வதுண்டு. நல்ல நிலங்களில் பயிரிட்டால், தேக்கு மரங்கள் 50 அல்லது 60 வருஷங்களில் வெட்டும்படியான நிலைமைக்கு வரும்.

மேற்கு மலைத் தொடரிலும், இமயமலைச் சாரலிலும், பர்மா முதலிய பிரதேசங்களிலும்

தேக்கு மரங்கள் ஏராளமாகப் பயிராகின்றன. இரங்கூனிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டு வரும் தேக்கு மரங்கள் மிகச் சிறந்தவை. அங்கிருந்து கடல் வழியாக நம் நாட்டிற்கு இவைகள் கொண்டு வரப்படுகின்றன.

கடற்கரைக்கு அருகாமையில் கப்பல் வந்ததும், இம்மரங்களைத் தண்ணீரில் தூக்கிப் போட்டு விடுவார்கள். அவைகள் அலைகளால் மோதப்பட்டு மிதந்து கொண்டு, கடற்கரை வந்து ஒதுங்கி நிற்கும். பிறகு அவைகளைக் கரையேற்றுவார்கள். பெரிய மரக்கடைகளில் இம்மரங்களைப் பெருந் துண்டுகளாகவும், பலகைகளாகவும், சட்டங்களாகவும் அறுத்து வைத்திருப்பதைக் காணலாம்.

முற்கூறியபடி இம்மரம் பயன்படுவதுடன், அதன் இலைகளும் பலவகையிற் பயன்படும். இவ்விலைகள் போஜனபாத்திரமாகவும், பொட்டலங்கள் கட்டுவதற்கும், ஒரு விதச் சிவப்புச் சாயம் காய்ச்சுவதற்கும் உபயோகப்படுகின்றன.

கேள்விகள் :—

1. இதர மரங்களைவிடத் தேக்கு மரம் எந்த விதங்களில் மேலானது ?
2. தேக்கு மரங்கள் உண்டாகும் இடங்களைச் சொல்.
3. தேக்கு மரத்தினால் செய்யப்பட்ட சாமான்கள் சிலவற்றைக் கூறு.

18. அலாவுதீனும் அதிசய விளக்கும்

சீன தேசத்தின் தலைநகராகிய பீகிங் பட்டணத்தில் அலாவுதீன் என்னும் ஒரு சிறுவன் இருந்தான். தையற்காரனாக இருந்த தந்தை இறந்துவிடவே, அச் சிறுவனது தாய் மெய் வருந்தக் கூலிவேலை செய்து அவனைக் காப்பாற்றி வந்தனள். வயது பதினைந்து ஆகியும், அவன் எவ்விதத் தொழிலும் பயிலாமல் விளையாட்டிலேயே காலங் கழித்து வந்தான்.

ஒருநாள் அலாவுதீன் வீதியில் விளையாடிக் கொண்டிருந்தபொழுது, ஒரு மந்திரவாதி அங்கு வந்து, அவனைப் பார்த்து, "உனது தந்தை சௌக்கியமா? நான் உன்னுடைய சிற்றப்பன். பல ஆண்டுகளாக இந்தியாவுக்குச் சென்று, அங்குத் தங்கி இப்பொழுது இவ்வூருக்குத் திரும்பியுளேன்" என்று வஞ்சகமாகக் கூறினான். சிறுவன் மந்திரவாதியினது பொய்யுரைகளை மெய்யென்று நம்பித் தனது பிதா காலஞ்சென்றதைத் தெரிவித்து, அவனைத் தன் வீட்டுக்கு அழைத்துச் சென்று, தெருவில் நிகழ்ந்ததைத் தாயினிடம் கூறினான். அவளைக் கண்டதும் மந்திரவாதி, இறந்த தமயனை நினைந்து ஓலமிட்டுப் பாசாங்காக அழுதான்.

தாயும் மந்திரவாதியைத் தனது மைத்துன னென்றே நம்பி, நன்கு உபசரித்தனள்.

மறுநாள் மந்திரவாதி அலாவுதீனின் தாயை நோக்கி, "மைந்தன் ஒரு தொழிலும் செய்யாமல் வீண்காலம் போக்குவது சரியன்று. வியாபார நிமித்தம் என்னுடன் அவனை அழைத்துச் சென்று, மாலையில் வீடு திரும்ப அனுமதியுங்கள்" என்றான். தாயும் அதற் கிசைந்து, அலாவுதீனை மந்திரவாதியுடன் அனுப்பினள்.

இருவரும் நகரத்தை விட்டு வெகு தூரஞ் சென்று ஒரு வெட்டவெளியை அடைந்தனர். அங்கு ஏகியதும், மந்திரவாதி சில உலர்ந்த சுள்ளிகளைப் பொறுக்கித் தீமூட்டி, அதில் ஒரு பொடியைத் தூவிச் சில மந்திரங்களை ஜெபித் தான். திடீரென்று தரை பிளந்து ஒரு பாறை தோன்றியது.

இவற்றையெல்லாம் கண்ணுற்ற அலா வுதீன், அச்சமுற்று ஓட முயன்றனன். உடனே மந்திரவாதி அவனைப் பிடித்து, "நான் கூறும் விதம் செய்தால் உனக்கு நன்மை யுண்டாகும். இல்லாவிடில் நீ உயிர் பிழைப் பது அரிது" என்று பயமுறுத்தினான். தப்பும் வழியின்றி அலாவுதீன் மந்திரவாதி ஏவிய படியே அங்கிருந்த பாறையைப் புரட்டினன். பல படிகளுள்ள ஓர் ஆழமான பிலம் அங்குத்

தோன்றிற்று. மந்திரவாதி இளைஞனை நோக்கி, “மைந்த! இப் படிகளில் இறங்கிச் சென்றால் ஒரு சிங்காரத் தோட்டத்தைக் காண்பாய். அங்கு ஓர் ஆலயத்தில் எரியும் விளக்கை அவித்து, அதை எடுத்து வந்து என்னிடம் கொடு. அங்குப் பொன்னும் மணியும் குவியல் குவியலாகக் காணப்படும். அவைகளில் வேண்டிய அளவு நீ எடுத்துக்கொள். ஒன்றுக்கும் பயப்படாதே. இந்த மோதிரம் எல்லா ஆபத்துக்களினின்றும் காப்பாற்றும்” என்று ஒரு மோதிரத்தை அவன் விரலிலிட்டான்.

மந்திரவாதி செப்பிய வண்ணமே அலாவுதீன் குகையின் வழியே இறங்கித் தோட்டத்தை யடைந்தான். என்ன அதிசயம்! அங்குப் பொன்மயமான மரங்கள் நவரத்தினக் கனிகளைத் தாங்கிக்கொண்டிருந்தன. அவைகளைப் பார்த்துப் பிரமித்த வாலிபன், இரத்தினங்களைப் பறித்துத் தனது சட்டைப் பைகளில் நிரப்பிக் கொண்டான். பின்பு விளக்கை எடுத்துக்கொண்டு பிலத்தின் வாயிலண்டை வந்தான். மந்திரவாதி மிக்க ஆத்திரத்துடன், “தீபத்தை என்னிடம் கொடு” என்று கேட்டான். “நான் வெளியேறி வந்த பிறகு தான் கொடுப்பேன்” என்று அலாவுதீன் உரைத்தான். மந்திரவாதி அவனை வெளியேற விடாமல் தடுத்துக்கொண்டு விளக்கைமட்டுந்

தரப் பன்முறை கேட்டனன். பிடிவாதமாக அலாவுதீன் அதைக் கொடுக்க மறுத்ததின் பேரில், மந்திரவாதி மீண்டும் நெருப்பில் ஒரு பொடியைத் தூவி மந்திரத்தை உச்சரித்தான். அக்கணமே பாறைபிலத்தை மூடிக்கொண்டது. தனது எண்ணம் நிறைவேருததுபற்றி மந்திர வாதி அச்சிறுவனையேசிக்கொண்டேயேகினன்.

பாறையைப் புரட்டிக்கொண்டு மேலே வர முடியாமல் அலாவுதீன் மனங் கலங்கினுன். ஐயோ பாவம்! என்ன செய்வான்? தோட்டத்தில் இங்கு மங்கும் அலைந்தான்; அழுதான். பசியும் களைப்பும் அதிகரித்தன. மரிப்பது திண்ணமென்று இரு கரங்களையும் குவித்துக் கடவுளைத் தியானித்தான். மோதிரம் கையில் உரசியதும், ஒரு பூதம் திடீரென்று தோன்றிற்று. அதைக் கண்ணுற்ற அலாவுதீன் நடுக்கமுற்ருன். அப்பொழுது பூதம், "நான் மோதிரத்தின் அடிமை; இட்ட பணியைச் செய்வேன்; இப்பொழுது தாங்கள் எனக்கு ஏவும் வேலை யாது?" என்று வினவியது.

இதைக் கேட்டதும் அலாவுதீன் பயந் தெளிந்து, "என்னை வீட்டில் கொண்டுபோய் விடு" என்று கட்டளையிட்டான். அக்கணமே பூதம் அவனது இல்லத்தில் கொண்டு போய்ச் சேர்த்தது. அலாவுதீன் குறித்த காலத்தில் திரும்பாததால் வருந்திக் கொண்டிருந்த

அன்னை, மகனைக் கண்டதும் அளவிலா ஆனந்தங்கொண்டனள். சிறுவனும் மந்திரவாதியின் தந்திரங்களை முற்றிலும் விளக்கினான்.

பிறகு, தனது பைகளில் நிரப்பி யிருந்த இரத்தினங்களை விற்று ஜீவனஞ் செய்ய எண்ணி, அலாவுதீன் அவைகளை ஒரு வியாபாரி யிடம் கொண்டு சென்றான். சிறுவனின் அறியாமையையும், ஏழைமையையும் உணர்ந்த அந்த வியாபாரி, அவை ஒவ்வொன்றுக்கும் ஓரணு வீதம் தர, வேறு வழியின்றி அலாவுதீன் அதற்குச் சம்மதித்து அந்தச் சொற்பத் தொகையை வாங்கிக்கொண்டு வீடு திரும்பினான்.

தாயும் மகனும் அப் பணத்தைக் கொண்டு சிலமாதங்கள் ஜீவனஞ் செய்தனர். மறுபடியும் செலவிற்குப் பணம் இல்லாமற் போகவே, சிங்காரத் தோட்டத்திலிருந்து எடுத்து வந்த விளக்கை விற்றுவிட எண்ணி, அதிற் படிந்திருந்த தூசிகளைப்போக்க அலாவுதீன் அதைத் துடைத்தான். திடீரென ஒரு பெரும் பூதம் தோன்றி, " நான் இவ்விளக்கின் அடிமை. நீங்கள் ஏவும் பணியைச் செய்து முடிப்பேன் " என்றது. அலாவுதீன் மிகக் களிப்படைந்து, " விளக்கின் பூதமே ! சீனச் சக்கரவர்த்தியின் அரண்மனைக்கு எதிரில் வனப்பு மிக்க மாளிகை ஒன்று நிருமித்து அதில் பொன்னும், மணியும், மற்றும் பல பொருள்

களும் அமைத்துவை" என்று ஏவினன். இமைப்பொழுதில் அவ்வாறே அப்பூதம் அமைக்க, அன்னையும் புதல்வனும் சுகமாக அதில் வாழ்ந்து வந்தனர்.

தனது அரண்மனைக்கு எதிரில் நிருமிக்கப்பட்ட அலங்காரமான மாளிகையில் வசித்த அலாவுதீனுடைய பெருஞ் செல்வத்தை அறிந்த சீனச் சக்கரவர்த்தி, தன் புதல்வியை அவனுக்கு மணஞ் செய்வித்தான். மணமகனும், மணமகளும் சகல வைபவங்களுடன் இல்லறம் நடத்தி வருவதை மந்திரவாதி அறிந்தான். அவன் அழுக்காறடைந்து, அந்த அதிசய விளக்கை அலாவுதீனிடமிருந்து பெற ஒரு சூழ்ச்சி செய்தான். ஒரு நாள் அலாவுதீன் வேட்டைக்குச் சென்றிருந்த தருணம் பார்த்து, சில புதிய விளக்குகளை ஒரு கூடையில் தாங்கிக்கொண்டு ராஜ வீதி வழியாகச் சென்று, "பழைய விளக்குகளுக்குப் பதிலாகப் புதிய விளக்குகள் தருவேன்" என்று கூவினன். அதைக்கேட்ட அலாவுதீனின் மனைவி, படுக்கையின் கீழ்த் தனது கணவன் பத்திரமாக வைத்திருந்த பழைய விளக்கை எடுத்து வந்து அவனிடம் கொடுத்துப் புதியதொன்றைப் பெற்றுக்கொண்டு உட்சென்ருள். மந்திரவாதி துரிதமாக ஊருக்குப் புறம்பே வந்து 'அவ் விளக்கைத் தேய்க்கவே

அதிலிருந்த பெரும் பூதம் வெளிவந்தது. அவன், "பூதமே! அலாவுதீனுடைய மாளிகையையும் என்னையும் இந்தியாவுக்குக் கொண்டு சேர்" என்று உத்தரவிட்டான். அதுவும் அவ்வாறே செய்தது.

வேட்டையிலிருந்து திரும்பியதும், அலாவுதீன் தனது மாளிகையைக் காணுமல் மனந் திடுக்கிட்டான்; சிறிது நேரம் துயரக் கடலில் ஆழ்ந்து கண்ணீர் சொரிந்தான். பின்பு விரலில் அணிந்திருந்த ஆழியின் ஞாபகம் வந்தது. அதைத் தேய்த்ததும், வெளிப்பட்ட பூதத்தை நோக்கி "எனது மாளிகை எங்கே?" என்று வினவினன். அதிசய விளக்கின் உதவியினுல் மந்திரவாதி அதை இந்தியாவில் வைத்திருப்பதாக அப்பூதம் மறுமொழி பகர்ந்தது. "அதை இங்குக் கொண்டுவருக" என்று அலாவுதீன் ஏவினுன். "ஐயனே! அது என்னுலாகாத காரியம். விளக்கின் பூதம் என்னைவிட வலிமை மிகுந்தது. ஆனுல் தங்களை அங்குக் கொண்டு சேர்ப்பேன்" என்று கூறி, இந்தியாவிலிருந்த அம்மாளிகையின் முன் அலாவுதீனைக் கொண்டுபோய் நிறுத்திற்று.

தற்செயலாய் அரசகுமாரி பலகணியின் வழியாக அலாவுதீனைக் கண்டனள். அவனை ஜன்னலுக் கருகில் அழைத்து, "மந்திரவாதி

வெளியிற் சென்றிருக்கிறுன் அவன் தன்னே விவாகம் செய்துகொள்ளுமாறு வற்புறுத் துகிறுன் ; இசையாவிடில் என்னேக் கொல்வ தாகவும் பயமுறுத்துகிறுன் ; விரைவில் என்னே விடுவிக்க முயற்சியுங்கள்'' என்று இயம்பினள்.

அலாவுதீன் மோதிரப் பூதத்தின் உதவியி ஞல், மருந்துப் பொடி ஒன்றைப் பெற்றுத் தன் மனேவியிடம் அளித்து அதைப் பாலில் கலந்து மந்திரவாதிக்குக் கொடுக்கும்படி கூறி விட்டுத் தான் ஒரு திரையின் பின் ஒளிந்து கொண்டிருந்தனன். இரவில் மந்திரவாதி வந்ததும், தனது கணவன்கூறியபடியே இராஜ குமாரி மருந்திட்டிருந்த பாலேமந்திரவாதியிடம் கொடுத்தனள். அதைப் பருகியதும், அவன் மயக்கமுற்றுக் கீழே சாய்ந்தனன். உடனே அலாவுதீன் ஓடி மந்திரவாதி தன் இடுப்பில் வைத்திருந்த விளக்கை எடுத்துத் தேய்த்து, அப் பூதத்தின் உதவிஞல் மாளிகையுட னும், மனேவியுடனும் தனது நகரை யடைந்த னன். பிறகு மந்திரவாதியைச் சிறையில் வைத்து விட்டு, அலாவுதீனும் அரசகுமாரியும் நெடு நாள் இனிது வாழ்ந்திருந்தனர்.

சொல் விளக்கம் :—ஓலமிட்டு = கூச்சலிட்டு. ஆழி = மோதிரம். அழுக்காறு = பொருமை. அக்கணமே = அந்த க்ஷணமே. நிருமித்தல் = அமைத்தல். பிலம் = குகை.

19. தினசரிப் பத்திரிகை

தந்தை :—சுந்தரம், எனக்கு வருகிற தினசரிப் பத்திரிகையை நீயும் படிக்கவேண்டும். பாடம் படிக்கும் நேரம் போக ஓய்வு நேரங்களில் பத்திரிகைகளைப் படிக்கலா மன்றோ?

சுந்தரம் :—பத்திரிகை படிப்பது வீண்பொழுது போக்கு ஆகாதோ?

தங். :—அது தப்பான எண்ணம். இக்காலத்தில் 'கிணற்றுத் தவளை' போல் இருத்தல் கூடாது. உலகத்தில் நாடோறும் நிகழும் நிகழ்ச்சிகளையும், செய்திகளையும், மாறுதல்களையும் படித்தறிவதால் உலகியல் அறிவு விசாலப்படும்; பாஷா ஞானமும் விருத்தியாகும். இதோ பார்! உலகச் செய்தித் திரட்டு. இத்தலைப்பின் கீழ் உலகத்திலுள்ள வர்த்தமானங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

சுங். :—இந்தச் செய்திகள் பத்திராதிபருக்கு எப்படித் தெரியும்?

தங். :—பத்திரிகையின் நிருபர்கள் பல ஊர்களிலும் இருப்பார்கள். அவ்வவ் விடங்களின் செய்திகளை உடனுக்குடன் தந்தி மூலமாகவும், தபால் மூலமாகவும் தெரிவிப்பார்கள். வெளிநாட்டுச் செய்திகளைச் சேகரித்துத்

தெரிவிக்க ஒரு கழகத்தாரும் இருக்கின்றனர்.

சுங். :—இதோ சில படங்கள் தெரிகின்றனவே, இவை எதற்காக அச்சிடப்பட்டுள்ளன ?

தங். :—முக்கியமான சம்பவங்களைப் படங்கள் மூலமாகத் தெரிவிப்பார்கள். வியாபாரிகளும் தங்கள் விளம்பரங்களைப் படங்கள் மூலமாக வெளியிடுவார்கள்.

சுங். :—இங்கே விலைவாசிகள் குறிக்கப்பட்டிருக்கின்றனவே, இவைகள் யாவை?

தங். :—இது தான் வியாபாரப் பகுதி. இதில் பல பொருள்களின் அன்றூட விலையைக் குறிப்பிட்டிருப்பதால், வர்த்தகர்கள் அவைகளைப் பார்த்து, விலை யேற்றத்தையும் குறைவையும் அறிந்து கொள்ளுதல் கூடும்.

சுங். :—பந்தய விளையாட்டுப் பகுதி என்று இதோ தலைப்பெயர் காண்கிறதே; இதை விளக்கிச் சொல்லுகிறீர்களா ?

தங். :—இது ஒரு முக்கியமான பகுதியே. விளையாட்டில் ஊக்கமுள்ள யாவரும் இதை உற்சாகத்துடன் கவனிப்பார்கள். இதில் எந்த எந்த ஊர்களில் கால்பந்து முதலிய விளையாட்டுக்கள் நடை பெற்றன ; எந்தக் கட்சியார் ஜயித்தனரென்பவை வெளியிடப் படும்.

சுங் :—இவ்வளவு விஷயங்கள் தானே பத்திரிகை களில் அடங்கியிருக்கும் ?

தங் :—பத்திராதிபரின் தலையங்கங்களும், கல்வி, தொழில் முறைகள், சுகாதாரம், ராஜீய விஷயங்கள் இவை பற்றிய கட்டுரைகளும், சிறு கதைகளும், மற்றும் பல செய்தி களும் பத்திரிகைகளில் வெளிவரும்.

சுங் :—இவ்வளவு சமாசாரங்களையும் சேகரித் துப் பிரதி தினமும் அச்சிடுவது மிகக் கடினமான வேலையல்லவா ?

தங் :—ஆம். ஒரு பத்திரிகையின் காரியாலயமும், அச்சு யந்திர சாலையும் தேன் கூட்டிலுள்ள தேனீக்களைப்போல, இரவும் பகலும் வேலை செய்து கொண்டிருப்பது மிகவும் வியக்கத் தக்கதே !

சுங் :—இப்பத்திரிகைகளை அச்சிட்டு அனுப்பு வதற்கு ஏராளமான பணம் வேண்டுமே ?

தங் :—ஆயிரக் கணக்கான சந்தாதாரர்கள் சேர்ந்திருப்பர். அவர்கள் செலுத்தும் கட்டணத்தைக் கொண்டுதான் பத்திரிகை கள் நடைபெறுகின்றன.

சுங். :—அன்னையும் ஏதோ பத்திரிகை வாசிக்கி ருர்களே !

தங். :—அது ஒரு வாரப் பத்திரிகை.

சுந். :—அப்படியானல் வேறு விதப் பத்திரிகைகளும் உண்டோ?

தந். :—உண்டு. பத்திரிகைகள் வாரம் மும்முறையாகவும், வாரம் ஒரு முறையாகவும், பக்ஷத்திற்கொரு முறையாகவும், மாதாந்திரமாகவும், வருஷ அநுபந்தமாகவும் வெளிவருகின்றன. மேலும் விகடம், போதனு முறை, மற்றும் பல தொழில்கள் இவை சம்பந்தமான தனிப் பத்திரிகைகளும் உண்டு.

சுந். :—பத்திரிகைகளின் அவசியத்தையும், அவற்ருல் விளையும் நன்மையையும் இன்று அறிந்துகொண்டேன். இனி பத்திரிகைகளை ஒழுங்காகப் படித்து வருவேன்.

சொல் விளக்கம் :—நிருபர் = சமாசாரம் எழுதுவோர். காரியாலயம் = ஆபீசு. கட்டணம் = சந்தா. கட்டுரை = வியாசம்.

கேள்விகள் :—

1. பத்திரிகைகள் படிப்பதால் விளையும் நன்மைகள் யாவை?
2. தினசரிப் பத்திரிகைகளில் வெளிவரும் பகுதிகள் யாவை?
3. பத்திராதிபர், நிருபர், தலையங்கம்—விளக்குக.

20. அதிவீர ராம பாண்டியர்

சற்றேறக்குறைய ஐந்நூறு வருடங்கட்கு முன்னர், திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள தென் காசி என்னும் நகரில் அதிவீர ராமர் என்ற பாண்டிய மன்னர் ஆட்சி புரிந்து வந்தார். இவர் தென் மொழியிலும், வட மொழியிலும் நல்ல பாண்டித்தியமும், தமிழிற் சிறந்த கவி பாடுந் திறமையும் வாய்ந்தவர். நீங்கள் பாலர் தமிழ் வாசகம் நான்காம் புத்தகத்திற் படித்த வெற்றி வேற்கை என்னும் நறுந்தொகை இவர் இயற்றியதே.

அதிவீர ராம பாண்டியரது தமையனார் வரதுங்க பாண்டியர் என்பவர், கரிவலம் வந்த நல்லூர் என்னும் பதியில் செங்கோல் செலுத்தி வந்தார். இவர் சீரிய ஒழுக்கமும் தெய்வ பக்தியும் வாய்ந்தவர். தமிழில் மிக்க பாண்டித்தியம் பெற்று ஒரு சிறந்த புலவராகவும் இவர் விளங்கினர். இவரது மனைவியார் பெயர் மதன லீலையார். இம் மாதும் நிறைந்த கல்வியும், பாடல்கள் இயற்றுந் திறமையும் படைத்தவர். இதனல் நமது தமிழ் நாட்டுப் பெண்டிர் முற்காலத்தில் கல்வி கேள்விகளில் தேர்ச்சி பெற்றிருந்தமை புலனகிறது.

அதிவீர ராம பாண்டியர் இயற்றிய நூல்களில் மிகச் சிறந்தது நைடதம். இக் காவியம்

நிடத நாட்டை யாண்ட நள மகாராஜனுடைய இனிய சரித்திரத்தைக் கூறுகின்றது. ‘ நைடதம் புலவர்க்கு ஔடதம் ’ என்னும் பழமொழி, இந்த நூலின் பெருமையை நன்கு விளக்கும். உடம்பில் உற்ற பிணியை ஔடதம் எவ்வாறு போக்குமோ, அதுபோலக் கல்வியில் அறியாமை யென்னும் பிணியை இந்நூல் போக்கும் என்பது இப் பழமொழியின் கருத்து.

இந்த நைடதத்தைப் பற்றிக் கர்ண பரம்பரையான ஒரு கதை பின்வருமாறு வழங்கி வருகிறது : இந்நூலை இயற்றிய அதிவீர ராமர் தம்மைச் சூழ்ந்திருந்த புலவர்களிடம் அதைக் காட்டினர். அவர்களும் அதைப் புகழ்ந்து, “அடி முதல் நுனி வரை கரும்பு போன்றிருக்கிறது ” எனப் புகன்றனர்.

பின்பு தமது தமையனார் வரதுங்க பாண்டியருக்கும் ஒரு பிரதியை அனுப்பி, அவரது அபிப்பிராயத்தையும் வேண்டினர். வரதுங்கர் அந்நூலைத் தமது மனைவியிடம் கொடுத்து, அதிலுள்ள குண தோஷங்களை அதிவீர ராமருக்கு அறிவிக்குமாறு கூறினர். அவர் அதனை ஆதியோடந்தமாகப் படித்து, “வேட்டைக்குச்சென்ற நாய் வீட்டுக்குத் திரும்பியது போலிருக்கிறது ” என்று எழுதி யனுப்பினர்.

அதைக் கண்டதும் அதிவீர ராமருக்குக் கோபம் உண்டாயிற்று. உடனே நால்வகைச் சேனைகளுடனும் புறப்பட்டுக் கரிவலம் வந்த நல்லூரை யடைந்தார். தம்மை அவமதித்த தற்காகத் தமையனுருடன் போர் புரிய வந்திருக்கும் செய்தியைச் சொல்லியனுப்பினர். தம்பியின் குணங்களை நன்குணர்ந்த வரதுங்கர், அச் செய்தியைத் தமது மனைவியிடம் தெரிவித்தார். நுண்ணறிவுடைய அம் மாது, ஓர் ஏடும் எழுத்தாணியும் எடுத்துப் பின்வரும் பாட்டை எழுதித் தன் மைத்துனனுக்கு அனுப்பினர்.

> "செஞ்சுடரோன் மைந்தனையும் தென்னிலங்கை [வேந்தனையும்
> பஞ்சவரிற் பார்த்தனையும் பாராதே—விஞ்சும்
> விரதமே பூண்டிந்த மேதினியை ஆண்ட
> பரதனையும் ராமனையும் பார்."

"சூரிய புத்திரனுகிய சுக்கிரீவன், தன்னுடன் பிறந்த வாலியைக் கொல்லச் செய்தான். விபீஷணன், தனது சகோதரன் இராவணனைக் கைவிட்டு, எதிரியாகிய இராமருடன் சேர்ந்து கொண்டு அவனைக் கொல்வதற்கு உதவி செய்தான். பஞ்சபாண்டவர்களில் ஒருவனுகிய அர்ச்சுனன் தன் தாய் வயிற்றிற் பிறந்த கர்ணனைக் கொன்றான். நீ இவர்களைப்போல் இராமல், தமையனுகிய இராமன் சொல்லை

விரதமாகக் கொண்டு நடந்துவந்த பரதனைப் போல் நடந்துகொள்'' என்பது இப் பாட்டின் கருத்து.

இச் செய்யுளைப் படித்த அதிவீர ராமர், கோபம் நீங்கித் தமது தவறுதலை யுணர்ந்தார். கண்களினின்றும் நீர் ததும்பியது. உடனே சேனைகளை ஊருக்குத் திரும்பிப் போகுமாறு கட்டளையிட்டுத் தமது அண்ணன் அண்ணியாரிடம் கால்நடையாகச் சென்று, அவர்களை வணங்கிச் ''சிறியோர் செய்த சிறுபிழை எல்லாம் பெரியோராயின் பொறுப்பது கடனே'' என்று மன்னிக்கும்படி வேண்டினர்.

பின்னர், சாவதானமாக அதிவீர ராமர், '' அண்ணா! புலவர்களெல்லோரும் புகழ்ந்து பாராட்டிய நைடதத்தை அண்ணியார் மட்டும் வேட்டை நாய் போன்ற தென்பானேன்!'' என்று வரதுங்கரைக் கேட்டார். அவர், ''உனது அண்ணியாரையே கேட்டுத் தெரிந்து கொள்'' என்றனர். அண்ணியார், ''வேட்டை நாய் வேட்டைக்குப் போகும்போது அதிகச் சுறுசுறுப்பாகவும், வீட்டுக்குத் திரும்பும் போது சோர்ந்து மந்த கதியுடனும் இருக்குமன்றோ? அதைப்போலவே உமது நூல் ஆரம்பத்தில் மிகக் கம்பீரமாகவும் சிறப்பாகவும் சென்று, பிந்திய பாகங்களில் மந்தமாக அமைந்திருக்கிறது'' என்றனர். அதிவீர ராமர்

" புலவர்களெல்லோரும் இந்த நூல் கரும்பு போன்றது எனக் கூறினரே ; அது பொய்யாகுமா?'' என்று வினவ, அம்மையார், "மைத்துனரே ! அவர்கள் கூறியதும் உண்மையே. கரும்பு ஆரம்பத்தில் அதிக ருசியாக விருந்து, நுனிப்பக்கம் போகப்போகச் சுவை குன்றுமன்றோ ?'' என்று விளக்கினூர்.

அன்று முதல் சகோதரரிருவரும் முன்னிலும் அதிக நட்புக்கொண்டு சமாதானமாக வாழ்ந்து வந்தார்கள்.

சொல் விளக்கம் :—தென்மொழி = தமிழ். வடமொழி = சம்ஸ்கிருதம். பதி = நகரம். ஆதியோடந்தமாக = ஆரம்பம் முதல் முடிவு வரையில். செஞ்சுடரோன் = சிவந்த கிரணங்களையுடைய சூரியன் வேந்தன் = அரசன். இலங்கை வேந்தன் = இங்கு விபீஷணனைக் குறிக்கிறது. பஞ்சவர் = ஐவர் ; பாண்டவர். பார்த்தன் = அருச்சுனன். விஞ்சும் = மேலான. ஔடதம் = ஔஷதம் ; மருந்து. கர்ண பரம்பரை = எழுத்து மூலமில்லாமல் ஜனங்களால் சொல்லப்பட்டு வழங்கி வருவது. மேதினி = உலகம்.

கேள்விகள் :—

1. செஞ்சுடரோன் யார் ?
2. தென்னிலங்கை வேந்தன் என்பது யார் ?
3. பார்த்தனுக்கு வேறு பெயர் யாது ?
4. அதிவீர ராமர் இயற்றிய இரண்டு நூல்களின் பெயரைச் சொல்.
5. நைடதம் என்னும் நூலின் அமைப்புக் கரும்புபோலும் வேட்டை நாயின் நடைபோலும் இருந்தது என்பதை எவ்விதம் மதன லீலையார் விளக்கினூர் ?



21. காகமும் பாம்பும் (பாட்டு)

1. கோடுறு சினையிற் காகம்
கூடுவைத்து அனேக காலம்
பேடொடு கூடி வாழும்
பெருமரப் பொந்தில் வந்தே,
ஆடிய கரும்பாம்பு ஒன்று அங்கு
அதுபெறும் முட்டை யெல்லாம்
நாடியே குடித்துப் போக,
நலிந்துஉளம் மெலிந்து வாடி,

2. தன்னுயிர்ப் பாங்க னென
சம்புகன் அருகு போய் "இங்கு
என்ன செய்குவன் நான்" என்ன,
"இதைக் கொலல் அரிதோ? நீ போய்

மன்னவன் தேவி ஆடும்
மஞ்சனச் சாலை புக்குப்
பொன் அணி கொண்டு வந்து
போடுக பொந்தில்" என்ன,

3. காகம் அப்படியே செய்யக்
காவலன் ஏவலாளர்
ஏகி மாமரத்தின் பொந்தை
ஈர்ந்தனர். ஈரும் போதில்
நாகம் அங்கிருந்து சீற,
நறுக்கினர் இரு துண்டாக.
ஆகையால் உபாயம் தன்னால்
ஆகாததில்லை கண்டீர்.

சொல் விளக்கம் :—கோடுறு=வளைந்த. சினையில்=மரக்கிளையில். பேடொடு=பெண் காக்கையுடன். பாங்கன்=தோழன். சம்புகன்=நரி. மஞ்சனச் சாலை=நீராடும் அறை. அணி=ஆபரணம். காவலன்=அரசன். ஈர்ந்தனர்=பிளந்தனர்.

22. மேட்டூர் அணை

தமிழ் நாட்டைச் செழிக்கச் செய்யும் பெரிய நதிகளில் காவிரியாறு மிகவும் முக்கியமானது. இந் நதி மேற்குமலைத் தொடரின் ஒரு பாகமாகிய குடகு மலையில் உற்பத்தியாகி மைசூர் ராஜ்யத்தின் வழியாய் வந்து சேலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் ஜில்லாக்களிற் பாய்ந்து வங்காளக் குடாக்கடலில் சங்கமமாகிறது.

காவிரியாற்றில் சில வருடங்களில் வேளாண்மைக்குப் போதிய அளவு வெள்ளம் வருவதில்லை. சில வருடங்களில் அதிக வெள்ளம் பெருகி வந்து விளை நிலங்களை யழித்து விடும். இவ்விரண்டினாலும் குடிகள் நஷ்டமடைவார்கள். சில சமயங்களில் அளவுக்கு மீறின வெள்ளம் வரும்பொழுது அந்த நீரெல்லாம் யாதொரு பயனுமின்றியேவீணாகக்கடலில் விழுகிறது. ஆதலால் தக்கதோர் இடத்தில் காவிரி நதிக்கு அணை கோலி, பெருகி வரும் புனலை அதில் தேக்கி வைத்துக்கொண்டால், காலா காலங்களில் வேண்டிய அளவு தண்ணீரை விடலாம். மழை யில்லாத காலத்திலும் தேக்கி வைத்த புனல் பாசனத்துக்கு உபயோகப்படும். மேலும், மீதியுள்ள ஜலத்தினால் வேறு இடங்களிலுள்ள புன்செய்களையும் நன்செய்களாக்கிக் குடிகளுக்கு மிகுந்த நன்மை விளைவிக்கலாம்.



மேட்டூர் அணை

இவற்றை யெல்லாம் ஓர்ந்தே, நமது துரைத்தனத்தார் சேலம் ஜில்லாவில் மேட்டூர் என்னுமிடத்தில், காவிரியில் ஒரு பெரிய அணை கட்டலாயினர். அதற்கு மேட்டூர் அணை என்று பெயர். அங்குள்ள சில மலைகளைச் சேர்த்துச் சுவரெடுத்து, ஒரு பெரிய ஏரியையும் அமைத்தனர். காவிரி நீர் இந்த ஏரியில் தேக்கப் பட்டு, உரிய காலங்களில் வேண்டிய அளவு நதியில் விடப்படுகிறது.

இந்த ஏரியும், அணையும் 1925-ம் வருஷத்தில் வேலை தொடங்கி 1934-ல் கட்டி முடிக்கப் பெற்றன. இவைகட்கு மட்டும் சுமார் ஐந்து கோடி ரூபாய் செலவாயிற்றும். இந்த ஏரி 60 சதுரமைல் விஸ்தீரணம் உள்ளது. அணையின் நீளம் 1 மைலும், உயரம் 176 அடியும் ஆகும். இந்த அணைக்கட்டும் ஏரியும் உலகத்திலுள்ளவைகளில் மிகப் பெரியவை.

திருச்சிக்குக் கிழக்கில் காவிரி நதியில் கல்லணை என்ற ஒரு பழைய அணைக்கட்டு இருக்கிறது. வெண்ணாறு பிரியும் இந்த அணையிலிருந்து ஒரு புதிய ஆறு வெட்டப்பட்டிருக்கிறது. இவ்வாற்றுக்குக் கல்லணைக் கால்வாய் என்று பெயர். மேட்டூர் ஏரியிலிருந்து விடப்படும் ஜலம், காவிரி நதியிலேயே 125 மைல் ஓடிவந்து, கல்லணைக் கால்வாயை அடைகிறது. இந்த நீர் இக்கால்வாய் மூலம் தஞ்சாவூர் வழி

யாகப் பட்டுக்கோட்டைத் தாலூக்காவுக்குச் சென்று, அங்குப் புதிதாக வெட்டப்பட்டுள்ள



பல சிறு வாய்க்கால்களில் பாய்ந்து அப் பிரதேசத்தை நன்செய் நிலங்களாகச் செழிக்கச் செய்கிறது.

மேலும், கல்லணைக் கால்வாயில் வரும் தண்ணீரிற் சிறிது பாகம் வடவாற்றில் விடப்பட்டு, அந்த ஆற்றிலிருந்து புதிதாக வெட்டப்பட்டுள்ள பல கால்வாய்கள் மூலம் மன்னார்குடித் தாலுக்காவுக்கும் கொண்டுபோகப்படுகிறது. கல்லணைக் கால்வாயின் நீளம் 70 மைல்; கிளைக் கால்வாய்களின் நீளம் 600 மைல். இவை இயந்திரங்களினால் வெட்டப்பட்டவை. இவற்றை வெட்டுதற்கு இரண்டு கோடி ரூபாய் செலவாயிற்றாம். இந்த மேட்டூர் அணைத் தேக்கத்தினால், மூன்று லட்சம் ஏகராவிற்கு மேற்பட்ட நிலங்கள் புதிதாக நன்செய்ச் சாகுபடிக்கு வருதல் கூடும்.

இந்தமேட்டூர் ஏரியின் அணையினால்தஞ்சை திருச்சி ஜில்லாக்களிலுள்ள பழைய நன்செய் நிலங்களுக்கு, மழையில்லாத காலத்தில் தண்ணீர் தவறாமல் விடவும், அதிக வெள்ளம் வரும் காலத்தில் வெள்ளச் சேதம் ஏற்படாமல் தடுக்கவும் சாதகமாகின்றது. மேலும் தஞ்சாவூர் ஜில்லாவில் ஏராளமான நிலங்கள் புதிதாக நன்செய்ச் சாகுபடிக்குத் தகுதியாகின்றன.

மேட்டூர் அணையில் தேக்கியுள்ள தண்ணீர் விழும் விசையினால், சில இயந்திரங்களை ஓடச் செய்து மின்சார சக்தி யுண்டுபண்ணுகிறார்கள். இந்த மின்சார சக்தியினால் வெகு தூரத்திலுள்ள பல ஊர்களுக்கும் விளக்குகள் போட

வும், பல புதிய கைத்தொழிற் சாலைகள் அமைக்கவும், இங்கிருந்து சேலத்திற்குக் குடி ஜலம் கொண்டுபோகவும் ஏற்பாடு செய்யப்படு கிறது. மேட்டூர் அணைக்குச் சேலத்திலிருந்து புதிதாக இருப்புப்பாதை போடப்பட்டிருக் கிறது. மாணவர்களே! இந்த அபாரமான அணையையும் ஏரியையும் நீங்கள் ஒரு முறை யாவது போய்ப் பார்த்து வருவது நலம்.

சுமார் பத்து வருஷங்களுக்கு முன் குன்று களும், காடுகளும், சிற்றூர்களுமாக இருந்த இடம், இப்பொழுது நீர் நிரம்பிய ஒரு பெரிய ஏரியாகவும், மேட்டூர் என்னும் சிற்றூர், பல புதுமைகள் வாய்ந்த ஒரு நகரமாகவும் விளங்கு வது பெரிய வியப்பே.

"பெற்றமுங் கழுதையும் மேய்ந்த அப்பாழ்
பொற்றொடி மகளிரும் மைந்தருஞ் செறிந்து
நெற்பொலி நெடு நகராயினும் ஆகும்."

கேள்விகள் :—

1. மேட்டூர் அணை எங்கு, எவ்வாறு கட்டப்பட்டிருக்கிறது?
2. கல்லணைக் கால்வாய் எங்கிருந்து பிரிகிறது?
3. அக் கால்வாயினால் ஏற்படும் நன்மைகள் யாவை?



23. உலகச் சாரணத் தலைவர் பேடன் பவல் பிரபு

நமது நாட்டில் பல பாடசாலைகளிலும் சாரணச் சங்கங்கள் ஏற்பட்டு, அவைகளில் சிறுவர்கள் சேர்ந்து பயிற்சி பெறுவதை நீங்கள் அறிவீர்கள். இவர்கள் காக்கி உடைகளணிந்து, கையில் ஓர் மூங்கிற் கோலைப் பிடித்துக்கொண்டு, திருவிழா முதலிய கூட்டங்களில் மிகச் சுறுசுறுப்புடன் தொண்டு புரிவதையும் நீங்கள் கண்டிருக்கலாம். இப்பொழுது உலக

முழுவதும் பரவியிருக்கிற சாரண இயக்கத்தை முதன் முதலாக அமைத்தவர் யாரென்றும், இச் சங்கங்களின் நோக்கங்கள் யாவை என்றும் இங்குப் படிப்போம்.

இங்கிலாந்திலுள்ள ராபர்ட் பேடன் பவல் என்பவர் தான் முதன் முதலாகச் சாரண இயக்கத்தை அமைத்தவர். இவர் 1857-ம் ஆண்டில் பிறந்தவர். பேடன் பவல் சிறு வயதிலேயே கூரிய அறிவு படைத்தவர். வீண் பொழுது போக்காமல் கல்வி கற்பதிலும், படகு ஓட்டுதல், நீந்துதல், குடிசை கட்டுதல், சமையல் செய்தல் முதலிய பல அலுவல்களைச் செய்வதிலும் தமது காலத்தை நல்வழிகளில் உபயோகித்து வந்தார். தமக்கு வேண்டிய சௌகரியங்களைப் பிறருதவியை நாடாமல் தாமே செய்து கொள்வார். மேலும், தாம் காணும் ஒவ்வொன்றையும் செவ்வையாகக் கவனித்து அறியும் தன்மை யுள்ளவர். தோப்புகட்குச் சென்று அங்குள்ள இயற்கைப் பொருள்களை நேரிற் கண்டு உற்று நோக்குவதிலும், விலங்கு, பறவை, மரஞ் செடி கொடிகள் யாவற்றையும் ஆய்ந்து அறிவதிலும் அவருக்கு அதிக ஆசை. மற்றவர்களையும் அவ்விதமே செய்யும்படி தூண்டுவர்.

கல்வி பயின்ற பிறகு ஓர் படைவீரராகி, நமது இந்தியா தேசத்திற்கு வந்து ஆறு வருஷகாலம் உழைத்த பின்பு, தென்னாப்பிரிக்கா

வுக்கு மாற்றப்பட்டு அங்கு நடந்த பெரிய யுத்தத்தில் பல வீரச் செயல்கள் புரிந்தார். அப்பொழுது அந்நாட்டிலுள்ள பல சிறுவர்களைச் சேர்த்து, உற்சாகத்துடன் படைவீரர்களுக்கு உதவி செய்ய அவர்களைப் பழக்கினுர். போர் முடிந்து இங்கிலாந்துக்குத் திரும்பியதும், அரசாங்கத்தார் அவரைப் புகழ்ந்து "ஸர்" என்னும் பட்டத்தை வழங்கினர்.

நாட்டின் பொது நலத்திற்காகத் தொண்டு செய்யச் சிறுவர்களைப் பழக்க வேண்டும் என்ற எண்ணம் அவரது மனத்தில் வெகு நாட்களாகக் குடிகொண்டிருந்தது. 1908-ம் ஆண்டில் "சிறுவர் சாரணீயம்" என்ற நூலை எழுதி வெளியிட்டார். அந் நூல் பலர் மனத்தையும் கவர்ந்தது. சாரணீயமும் அப்பொழுதே பிறந்து வளர ஆரம்பித்தது. அந்நாட்டின் பல ஊர்களிலும் சாரணப்படைகள் ஏற்படலாயின. இந்தப் புதிய இயக்கம் பிறகு உலக மெல்லாம் பரவி, 1917-ல் நமது தென்னிந்தியாவிலும் சாரணச் சங்கங்கள் அமைக்கப்பட்டன.

1912-ல் பேடன் பவல், தமக்கு மனைவியாக ஓலேவ் அம்மையாரை மணந்தார். 1920-ல் பேடன் பவல்உலகச்சாரணத் தலைவராக ஏற்றுக் கொள்ளப்பட்டார். ஓலேவ் அம்மையார் கன்னிச் சாரணர்க்குத் தலைவியானுர். 1921-ம் ஆண்டில் நம்து தேசத்திற்கு பேடன் பவல் விஜயஞ்

செய்தபொழுது, அப்பெரியாரைப் பல திறச் சாரணரும் சென்னையில் வரவேற்றனர். 1929-ம் ஆண்டில், நமது மாட்சிமை தங்கிய ஐந்தாம் ஜார்ஜ் சக்கரவர்த்தி, இவருக்குப் "பிரபு" என்னும் பட்டத்தை யளித்தார். இவரும் இவரது மனைவியாரும் இப்பொழுது இங்கிலாந்தில் வசித்து வருகின்றனர்.

சாரணர் சுயநலமின்றிப் பிறருக்கும், பிறந்த நாட்டிற்கும் இயன்ற அளவு தொண்டு செய்யப் பழகுகிறார்கள். அவர்கள் சாதி மத வேற்றுமை பாராட்டாமல் எல்லோரையும் சகோதரர்களாகக் கருதி நடப்பார்கள்.

சாரணன் மனத்திலும், வாக்கிலும், செயலிலும் தூய்மை யுடையவனாய், ஆய்ந்தறிதல், பணிவு, தன்னம்பிக்கை, துன்புற்ற காலத்திலும் மகிழ்ச்சியோடிருத்தல், சிக்கனம், மரியாதை முதலிய நற்குணங்களால் விளங்குவான்.

சாரணர்களில் பல திறத்தினர் உளர். ஆறு வயது முதல் பதினொரு வயதுவரையுள்ள சிறு பிள்ளைகள் ஓநாய்க்குட்டிகள் அல்லது குருளையர் எனப்படுவர். பதினொரு வயதுக்கு மேல் பதினெட்டு வயதுக்குட்பட்டவர்கள் வாலிபச் சாரணராவர். சிறுமிகளும் சாரண இயக்கத்தில் ஈடுபட்டுக் கன்னிச் சாரணப்படையில் சேரலாம்.

சொல் விளக்கம் :—வழங்கினர் = அளித்தனர். சிக்கனம் = அதிகச் செலவு செய்யாமை. தூய்மை = பரிசுத்தம். கன்னிச் சாரணர் = சாரணப் பெண்கள்.

24. கண்ணாடியின் சுய சரிதை

மாணவர்களே! நீங்கள் என்னைப் பல இடங்களில், பல உருவங்களிலும், பல நிறங்களிலும் பார்த்திருப்பீர்கள். நான் யார் தெரியுமா? நான் தான் கண்ணாடி. சாதாரணத் துண்டுகளாகவும், பல உருவமுள்ள புட்டிகளாகவும், டம்ளர்களாகவும், ஜாடிகளாகவும், பல நிறமுள்ள விளக்குச் சிம்னிகளாகவும் என்னைப் பார்த்திருப்பீர்கள். சிறுவர்கள் விளையாடும் கோலிக்குண்டுகளும், சிறுமிகள் அணியும் பலவித வளையல்களும் என்னாலானவைகளே. முகம் பார்க்கும் கண்ணாடிகளிலும், மூக்குக் கண்ணாடிகளிலும் நான் அமைந்துள்ளேன். தற்காலத்தில் அநேகவிதச் சாமான்கள் செய்யப்பட்டு, ஜனங்களுக்கு எண்ணிறந்த வகைகளில் உபயோகமாகும் என்னைப் பற்றி, நீங்கள் தெரிந்துகொள்ள ஆசைப்படுவீர்கள். ஆதலால் எனது பிறப்பையும் குணாதிசயங்களையும் சொல்லுகிறேன்; கேளுங்கள்.

சிலேட்டு அல்லது புத்தகத்தை உங்கள் கண்ணுக்கு முன் பிடித்தால், அதன் வழியாக எதிரிலுள்ள பொருள்கள் தெரியாவன்றோ? என்னாலான ஒரு (கண்ணாடித்) துண்டைக் கண் முன் பிடித்துப் பாருங்கள். என் வழியாக அப்பாலுள்ள பொருள்கள் புலப்படும். ஆத

லால் என் வழியாக வெளிச்சம் ஊடுருவிச் செல்லுகிறதென்பது உண்மை. எனது இந்த முக்கிய குணம் பற்றியே, உள்ளே வைத்த பண்டங்கள் இன்னதென்று எளிதில் தெரியும் பொருட்டு, என்னாலாக்கப்பட்ட ஜாடிகளையும், புட்டிகளையும் உபயோகிக்கிறார்கள். சட்டம் போட்ட படங்கள், கடியாரம் இவைகளின் முன் நான் இருப்பதால்தான் அவைகள் நன்றாய்த் தெரிகின்றன. நான் தண்ணீரில் கரைவதில்லை. என்னிடம் வைத்த புளிப்புப் பதார்த்தங்களும், தைலம் முதலியவைகளும் கைத்துப் போவதும், களிம்பு ஏறுவது மில்லை. நான் சாதாரணமாகக் கடினமாக இருந்தாலும், என்னை உருக்கி நானாவிதமான உருவங்களுள்ள சாமான்களாகச் செய்ய முடியும். தெளிந்த தண்ணீர்போல் நிறமில்லாமல் நான் காணப்படுவேன். என்றாலும் நான் உருகித் திரவமாக இருக்கும்போது சில வர்ணங்களைச் சேர்த்தால் அநேகவித நிறங்களுடனும் நான் அமைவேன்.

என்னிடத்தில் பல நற்குணங்கள் இருந்த போதிலும் சில துர்க்குணங்களும் உண்டு. நான் தவறிக் கீழே விழுந்தால், எளிதில் உடைந்து விடுவேன். ஆதலால் என்னை ஜாக்கிரதையாக உபயோகிக்கவேண்டும். என்னை ஒழுங்கான ஓரங்களுள்ள துண்டுகளாக அறுக்க, வைரம் பதித்த ஊசியினால் கீறவேண்டும். எனது

உடைந்த துண்டுகளின் ஓரம் உறுதியாயும், கூர்மையாயும் இருப்பதால், மாணவர்களே ! அவைகள் உங்கள் கை கால்களில் பட்டால், எளிதிற் குத்தி இரத்தம் வரச் செய்துவிடும். என்னுலாகிய சூடான சிம்னியில் குளிர்ந்த தண் ணீர் பட்டால், அது உடனே வெடித்துவிடும். ஆதலால் இவ்விஷயங்களில் நீங்கள் எச்சரிக் கையாக இருத்தல் நலம்.

எனது பிறப்பும் உற்பத்தியும் மிக்க அதிசய மானவை. மெருகும் அழகுமுள்ள நான், ஒரு வகையான மணலிலிருந்து உண்டாகிறேன் என்பதை நீங்கள் நம்பக்கூடமாட்டீர்கள். என் ருலும் அது உண்மையே.

பல நூற்ருண்டுகளுக்குமுன், சில ஆங்கில மாலுமிகள் திசை தவறி, ஆசியா மைனர் என் னும் நாட்டின் கடற்கரையில் வந்து இறங்கி ஞர்கள். அவர்கள் கடற்கரையின் மணலைக் குவித்து அடுப்புபோல் அமைத்துத் தீ மூட்டிச் சோறு சமைத்தார்கள். அத் தீயின் உஷ்ணத் திஞல், அந்த மணல் உருகிப் பளபளப்புள்ள பாளங்களாகக் காணப்பட்டது. அதைக் கண்ட மாலுமிகள் அதிசயித்து, அந்த மணலைச் சேக ரித்து, அதைத் தமது நாடு கொண்டுபோய் அங்கே என்னைச் செய்ய ஆரம்பித்தார்கள்.

சில பிரதேசங்களில் அகப்படும் தெள்ளிய மணலையும், சோடா உப்பையும், சுண்ணம்பு

நீற்றையும், கொஞ்சம் கரித் தூளையும் கலந்து, நன்றாகப் பொடி செய்து அதிக உஷ்ணமுள்ள உலைகளில் இட்டுக் காய்ச்சுவார்கள். அதனால் அப்பொடி உருகிப் பாகு போன்ற பக்குவமுள்ள திரவப்பொருளாக மாறும். இக் குழம்பை அச்சில் வார்த்துப் பல மாதிரியான புட்டிகள், குழாய்கள், ஓடுகள் முதலானவைகளைச் செய்வார்கள்.

தமிழ் நாட்டிலும் பண்டைக் காலத்தில் சில இடங்களில் மண்ணை உருக்கிக் கண்ணாடி வளையல்கள் செய்துவந்தார்கள். சென்னைக்கு அருகிலும், மற்றும் சில இடங்களிலும் என்னை உண்டுபண்ணும் தொழிற்சாலைகள் இக் காலத்தில் பல ஏற்பட்டிருக்கின்றன.

சொல் விளக்கம் :—எண்ணிறந்த=கணக்கற்ற. புலப்படும்=தெரியும். ஊடுருவி=உள்ளே நுழைந்து. கடினமாக=உறுதியாக. பாளங்களாக=தகடுகளாக.

கேள்விகள் :—

1. கண்ணாடியின் நற்குணங்கள் எவை? துர்க்குணங்கள் எவை?
2. கண்ணாடியினால் என்னென்ன சாமான்கள் செய்யப்படுகின்றன?
3. கண்ணாடி எதனால் செய்யப்படுகிறது?

———

25. அழகுக் கலைகள்

"கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு" என்றபடி, நாம் கற்றறியவேண்டிய விஷயங்கள் அளவிடக்கூடாதன. இவ்விஷயங்களைப் பல பாகங்களாகப் பிரித்து ஒவ்வொரு பாகத்தையும் கலை அல்லது சாஸ்திரம் என வழங்குவர். கணித நூல், பூமி நூல், வான நூல், பிராணி நூல், தாவர நூல் முதலியவை நமது அறிவை வளர்ப்பதால், அறிவுக் கலைகள் எனப்படும். சங்கீதம், சித்திரம், சிற்பம், நாடகம் என்னும் இவைகள் நமக்கு மனோகரமான இன்பத்தை அளிப்பதால், அழகுக் கலைகள் எனப்படும்.

அழகுக் கலைகளில் முதன்மை வாய்ந்தது சங்கீதம். இதனை இசைக்கலை என்றும் வழங்குவர். வாய்ப்பாட்டாலும், இசைக் கருவிகளாலும் நாம் சங்கீதத்தைக் கேட்கிறோம். இசையில் வல்லவர்கள் தமது இனிய குரல் கொண்டுபாடும் சங்கீதமே, மற்றவற்றிலும் சிறந்தது. இனிமையான குரல் அனைவருக்குமே வாய்ப்பதில்லை, சிலருக்குத்தான் அமையும். ஆதலால் அதனைக் கடவுளருளிய நன்கொடை என்பர். 'குரல் இல்லாதவனுக்கு விரல்' என்றபடி, வீணை, பிடில், புல்லாங்குழல், நாகசுரம் முதலிய இசைக் கருவிகள் அதற்கடுத்தபடி சிறந்தனவாம்.

இனிய பாட்டுக்களைக் கேட்டு மகிழாத மாந்தர் உலகில் ஒருவருமே இரார். தாய்மார் பாடும் தாலாட்டுக்களைச் செவியுறும் குழந்தைகள் அழுகை நீங்கி உறங்கும். ஏற்றம் இறைப்பவர், உழவர், படகு தள்ளுபவர் முதலான வேலைக்காரர்களும் தாங்கள் பாடும் பாட்டுக்களில் ஈடுபட்டுத் தமது வேலையைச் சுலபமாகச் செய்வார்கள்.

பாம்பு, பசு முதலிய பிராணிகள் கூட இசைக்கலைக்கு ஈடுபட்டுப் பரவசமடைகின்றன. பக்கவாத்தியங்களுடன் நடைபெறும் உயர்தரச் சங்கீதக் கச்சேரிகளைக் கேட்டு நாம் மிக்க ஆனந்த மடைகிறோம். தேவாரம், திருவாய்மொழி திருப்புகழ், பலவகைக் கீர்த்தனங்கள் முதலிய பாடல்களால் கடவுளைத் துதிக்கிறோம்.

பண்டைக் காலத்தில் தியாகையர், மகா வைத்தியநாதையர் முதலிய பல சங்கீத வித்துவான்கள் நமது நாட்டைச் சிறப்பித்துள்ளார்கள். இப்பொழுதும் பல சங்கீத நிபுணர்கள் நமது தமிழ் நாட்டில் விளங்கி வருகிறார்கள். தற்காலத்தில் பல இடங்களில் சங்கீதக் கழகங்கள் ஏற்பட்டுச் சங்கீதப் போட்டிகளும், கச்சேரிகளும் நடைபெறுகின்றன. நமது நாட்டுச் சர்வ கலாசாலைகளில் கூட இசைக்கலை ஒரு பரீட்சைக்கான பாடமாக அமைக்கப்பட்டுள்ளது.

இசைக்கலைகள் செவி வழியாக இன்ப மூட்டுவது போல, ஓவியம் அல்லது சித்திரக் கலை விழி வழியாக நமக்கு இன்ப மூட்டுவது. பலவகை மனித உருவங்களையும், மலை, கடல், நதி, வானம் முதலிய இயற்கைக் காட்சிகளையும் மற்றுமுள்ள பொருள்களையும், காகிதம், துணி முதலிய பொருள்களிலும், சுவர் முதலியஇடங்களிலும் பலவித வர்ணங்களால் அழகு பெற வரைவது சித்திரமாம்.

சித்திரத்தில் காணும் பல்வேறு பொருள்களையும் நேரில் பார்ப்பதுபோல, இப்படங்களிற் கண்டு நாம் மகிழ்ச்சி யடைகிறோம். சிறுவர்களுக்குப் படங்களைக் காட்டிப் பாடங்கள் கற்பிப்பது ஓர் சிறந்த முறையாகும். சித்திரத்தின் மூலமாகச் சிறுவர்கள் தாங்கள் பார்த்திராத பல பொருள்களையும் எளிதில் அறிந்து கொள்வார்கள்.

கடவுளின் உருவங்கள் வரைந்த படங்கள் நமது தெய்வ பக்தியைப் பெருக்கி, நல்ல கதியடைவதற்குத் துணை செய்கின்றன. தற்காலத்தில் ஏற்பட்டுள்ள போட்டோ படங்களும், சினிமாக் காட்சிகளும் சித்திரக் கலையின் அங்கங்களே. சித்திரம் வரைதல் நமது கவன சக்தியையும், பொது அறிவையுங்கூட விருத்தி செய்யும்.

மரம், மண், கல், உலோகம் முதலிய பொருள்களால் சிலைகளும், பதுமைகளும், விக்கிரகங்களும் செய்யப்படுவது சிற்பவேலை எனப் பெயர் பெறும். சிற்பக் கலை பயின்றவர்கள் சிற்பிகள் எனப்படுவர். ஓவியத்தைப்போல் சிற்ப வேலைப் பாடுகளும் கண்கள் மூலமாக நமக்கு இன்பம் அளிக்கின்றன. நமது நாட்டில் கோயில்களிலும் கோபுரங்களிலும் காணப்படும் சிற்ப வேலைகள் புராதனச் சிற்பிகளின் திறமையை நன்கு விளக்குகின்றன.

நாடகமும், நாட்டியமும் நல்வழிகளில் நடிக்கப்பட்டால், இன்பமளிக்கும் அழகுக் கலைகளே யாகும். அறிவுக் கலைகளைக் கற்பதுடன், அழகுக் கலைகளிலும் நாம் பயிற்சி பெற்று, அவைகள் நம் நாட்டில் நன்னிலை பெறுமாறு முயற்சிப்பது நமது கடமையாகும்.

சொல் விளக்கம் :—பரவசமடைகின்றன=மெய் மறந்து விடுகின்றன. தேவாரம்=சம்பந்தர், அப்பர், சுந்தரர் இம் மூன்று சைவ நாயன்மார்களும் பாடிய திருப்பாடல்கள். திருவாய்மொழி= வைஷ்ணவ ஆழ்வார்கள் பாடிய திருப்பாடல்கள். திருப்புகழ்= சுப்பிரமணிய சுவாமியைப்பற்றி அருணகிரிநாதர் பாடிய பாடல்கள். கீர்த்தனங்கள்=ஒருவகை இசைப் பாடல்கள். கழகம் =சங்கம்.

கேள்வி :—

இப்பாடத்தில் வந்துள்ள அறிவுக் கலைகளில் சில வற்றையும் அழகுக் கலைகளின் பெயரையும் எழுது.

26. சங்கீதக் கச்சேரி

(படம் படித்தல்)

[இந்தப் பாடத்தை மௌனமாக வாசித்து, படங்களுக்கும் கோடிட்ட இடங்களுக்கும் தகுந்த வார்த்தைகள் அமைத்து, பிறகு உரக்க வாசிக்கவும். கோடிட்ட இடங்களில் பின்வரும் சொற்களை உபயோகிக்கலாம் : பாகவதர், ராமாநுஜம், ராகம், பாடி, கூட்டினான், நான்காவது.]

ஜனவரிப் பண்டிகை விடுமுறைக் காலத்தில் சென்னையில் சங்கீத மகாநாடு நடைபெற்றது.

கிருஷ்ண —— ஒரு தினம் கதா காலட்சேபம் நடத்தினார். மறு நாள் நிகழ்ந்த சங்கீதக் கச்சேரியில் மணி ஐயர்  அடித்தார். இராஜமாணிக்கம் பிள்ளை  வாசித்தார். சங்கீத வித்துவான் —— ஐயங்கார் வாய்ப்பாட்டுப் பாடினார். அவர் முதலில் —— ஆலாபனம் செய்து, பிறகு ஒரு கீர்த்தனம் —— முடித்தார். அப்பொழுது வைத்து ஒருவன் சுருதி ——. மூன்றாவது நாள்

சரசுவதி  வாசிக்கும்பொழுது,

தட்சிணாமூர்த்தி  அடித்தார்.

நாள் கச்சேரி நடந்தது.

கடைசி தினம் ஒரு சிறு பையன் 

போடவும், ஒருவன் ஒத்து ஊதவும், மீனாட்சி

சுந்தரம் பிள்ளை  அடிக்கவும், இராஜ

ரத்தினம் பிள்ளை  வாசித்தார்.

இவ்விதம் சங்கீத மகா நாடு இனிது நடந்தேறியது.

---

27. அரசாளப் பிறந்த ஜய சந்திரன்

காட்சி I

இடம் :—கௌந்தல நாட்டரசன் அரண்மனை

காலம் :—பிற்பகல்

நடிகர்கள் :—பூபதி (அரசன்)

மதியூகி (மந்திரி)

ஜய சந்திரன் (ஓர் அநாதைச் சிறுவன்)

முனிவர்

சபையோர்

பூபதி :—முற்றும் துறந்த முனிவரே ! வணங்குகிறேன். ஆசனத்தில் அமருங்கள்.

முனிவர் :—எல்லா நலமும் உண்டாகுக ! அரசே ! இன்று என்னை இவ்விடம் வருமாறு வேண்டிக்கொண்டதன் காரணம் யாது ? அதனைத் தெரிவியுங்கள்.

பூபதி :—முக் காலமும் அறிந்த முனிவ ! எனக்குப் பிறகு பட்டத்திற்கு வர, தற்போது ஆண் சந்ததி இல்லையென்பது தங்களுக்குத் தெரிந்ததே. அதுபற்றிச் சில தினங்களாக எனக்குப் புத்திரன் பிறப்பானு வென்ற கவலை ஏற்பட்டிருக்கிறது. ஆதலால் தயைசெய்து தங்களது தவத்

தின் மகிமையினுல் வருங்காலத்தை யுணர்ந்து உரைக்குமாறு பிரார்த்திக் கிறேன்.

முனிவர் :—(சிறிது நேரம் தியானத்திலிருந்த பிறகு) மன்னரே ! தங்களுக்கு ஆண் குழந்தை பிறக்குமென்று தோன்றவில்லை. இத் தருணம் அரண்மனைக்கு வெளியில் கோலி விளையாடிக்கொண்டிருக்கும் ஜய சந்திரன் என்னும் சிறுவனே தங்களுக்குப் பின் அரசாளுவான். இது உண்மை. நான் போய் வருகிறேன்.

(எழுந்து வெளியே செல்லுகிறுர்)

பூபதி :—(திடுக்கிட்டு) ஓகோ, அப்படியா ? மந்திரி ! வேலையாளை ஏவித் தெருவில் கோலி விளை யாடிக்கொண்டிருக்கும் ஜய சந்திரனை அழைத்து வரச் செய்யும்.

மதியூகி :—மஹராஜ், அப்படியே செய்கிறேன். (சிறிது நேரத்திற்கெல்லாம் ஜய சந்திரன் ராஜ சபைக்கு வந்து எல்லாரையும் வணங்கி நிற்கிறுன்.)

சபையோர் :—(தமக்குள்ளே) இச்சிறுவனைப் பாருங்கள், என்ன அழகு ! மன்னனுக வரக்கூடிய குறிகள் இவனது முகத்தில் காணப்படுகின்றன. இவன் அரசாளத் தக்கவனே.

பூபதி :—சிறுவ! உன் பெயர் என்ன? உன் தாய் தந்தையர் யாவர்? நீ எங்கு வசிக்கிறாய்?

ஜய சந்திரன் :—(வணக்கத்துடன்) என் பெயர் ஜய சந்திரன். எனக்குத் தாயும் இல்லை; தந்தையுமில்லை. இந்த நகரத்திலுள்ள புண்ணியவான்கள் சிலர் எனக்கு விரும்பி யளிக்கும் உணவை யுண்டு, இரவில் காளி கோயிலில் படுத்துக்கொள்வேன்.

பூபதி :—நல்லது. நீ போகலாம்.

(ஜய சந்திரன் போகிறான். சபை கலைகிறது)

(மந்திரியுடன் தனித்து)

மதியூகி! முனிவர் சொல்லியது எனக்கு மனச் சமாதானம் அளிக்கவில்லை. அந்த அநாதைப் பையன் பட்டத்திற்கு வருதல் கூடாது. எனது மகள் விஜைக்கு ஓர் இராஜகுமாரனை மணம் புரிவித்து, அவ னுக்கு முடிசூட்டுவதே நலம். ஜய சந்தி ரன் உயிரோடிருந்தால்தானே அரசனா வான். அவனைக் காட்டிற்கு அழைத்துக் கொண்டுபோய் இன்று சாயங்காலமே கொன்றுவிட உத்தரவிட வேண்டும்.

மதியூகி :—தங்களது ஆணைப்படியே செய் கிறேன்.

காட்சி II

இடம் :—காடு

காலம் :—அந்திப்பொழுது

நடிகர்கள் :—கறுப்பன், முனியாண்டி என்ற இரு கொலையாளிகள், ஜய சந்திரன், முனிவர்.

முனியாண்டி :—ஏ கறுப்பா! ராஜாவின் கட்டளை தெரியுமல்லவா ? செய்யாவிட்டால் நமது தலை போய்விடும். ஜாக்கிரதை !

கறுப்பன் :—எல்லாம் தெரியும். உறையிலிருந்து வாளை யுருவி வேலை முடிக்கவேண்டியது தான்.

ஜய சந்திரன் :—(கத்தியைப் பார்த்து நடு நடுங்கிக் கடவுளைத் துதிக்கிருன்)

சரண கமலாலயத்தை அரை நிமிஷ நேரமட்டில்
தவமுறை தியானம் வைக்க—அறியாத
சடகசட மூடமட்டிப் பவவினையிலே சனித்த
தமியன்மிடி யான் மயக்கம்—உறுவேனே ?
கருணைபுரியா திருப்ப தேன குறையிவ் வேளை செப்பு
கயிலைமலை நாதர் பெற்ற—குமரேசா !

முனியாண்டி:—ஐயோ பாவம்! இப்பாலன் முகத்தில் பால் வடிகிறதே. இவனை நான் கொல்ல மாட்டேன்.

கறுப்பன் :—உன்னாலே காரியம் கெட்டுவிடும். நீ வேண்டுமானல் ஓடிப் போ.

முனியாண்டி :—இல்லே, தம்பீ! இப்படித் திரும்பி இவனை நன்ருகப் பார்த்துவிட்டுப் பேசு. இவனைப் பார்த்தாலே பாவம் போகும்.

கறுப்பன் :—(ஜய சந்திரனை உற்றுப் பார்த்துவிட்டு) நீ சொல்வது மெய்யே. இவனைப் பார்க்கும்பொழுது என் பிள்ளேயின் ஞாபகம் வருகிறது. நான் இந்தப் பாவத்தைச் செய்யமாட்டேன்.

முனியாண்டி :—பின்பு யாது செய்வது? சரி. ஒன்று செய்வோம். இவனுடைய வலது காலில் ஆறு விரல்கள் இருக்கின்றன. இந்த ஆருவது விரலே மட்டும் வெட்டிக் கொண்டுபோய், இவனைக் கொன்றதாக மந்திரியிடம் அடையாளம் காட்டிவிடுவோம்.

கறுப்பன் :—ஆமாம். இது நல்ல யோசனே. (ஜய சந்திரனின் வலதுகால் விரல் ஒன்றைத் துண்டித்து எடுக்கிருன்) கடவுள் இவனைக் காப்பாற்றுவாராக நாம் போவோம்.

(கொலேயாளிகள் போகிருர்கள். ஜய சந்திரன் கதறுகிருன். சிறிது நேரத்திற்கெல்லாம், அந்தக் காட்டில் வசித்துவரும் முனிவர் ஒருவர், மாலேக் கடன் முடித்து அவ்வழியாக வரும்பொழுது அழுகைக் குரலேக்கேட்டு அங்கு வருகிருர்.)

முனிவர் :—ஐயோ பாவம்! இரத்தம் வடிகிறதே. இந்த அநியாயத்தை யார் செய்தது? என்னுடன் எனது குடிசைக்கு வா.

(அவனுடைய கையைப் பிடித்து அழைத்துச் செல்லுகிறார்)

காட்சி III

இடம் :—காட்டில் முனிவரது ஆச்சிரமம்

காலம் :—நடுப் பகல்

நடிகர்கள் :—பூபதி, ஜய சந்திரன், முனிவர்

பூபதி :—(தனக்குள்) காட்டில் வேட்டையாட வந்தநான், பரிவாரங்களைப் பின்னால் விட்டு விட்டு ஒரு மானைத் துரத்திக்கொண்டு இங்குத் தனிமையாக வந்து சேர்ந்தேன். மானும் தப்பியோடி விட்டது. நான் களைப் படைந்து இந்த வெயில் வேளையில் தண்ணீர்த் தாகத்தினால் வருந்துகிறேன். என் செய்வது? அதோ ஒரு குடிசை தெரிகிறதே. அங்குச் சென்று பார்க்கிறேன்.

(குடிசையை நோக்கிச் செல்லுகிறார்)

ஜய சந்திரன் :—(குடிசையின் வெளியில் நின்றுகொண்டு குதிரை மீது வரும் அரசனைப் பார்த்து) மஹாராஜாவே! வாருங்கள்.

பூபதி :—(திடுக்கிட்டுத் தனக்குள்) நான் கொல்லச் சொன்ன சிறுவனல்லவா இவன்? இவன் பிழைத்திருக்கிருனே! (சிறுவனைப் பார்த்து) தாகத்திற்குத் தண்ணீர் வேண்டும். இக் குடிசையில் யார் இருக்கிருர்?

(சிறுவன் உள்ளே சென்று முனிவரை யழைத்துக் கொண்டு, ஒரு பாத்திரத்தில் ஜலத்துடன் வெளியே வந்து அரசனிடம் கொடுக்கிருன்)

பூபதி :—(குதிரையை விட்டிறங்கிச் சிறுவன் கொடுத்த தண்ணீரைக் குடித்துவிட்டு) முனிவரே! பணி கிறேன். இவ்வாலிபன் யார்?

முனிவர் :—இவன் பெயர் ஜய சந்திரன். பத்து வருஷங்களுக்கு முன் ஓர் இரவு இவனது கால் விரல் ஒன்று வெட்டப்பட்டு இக்காட்டில் அழுதுகொண்டிருந்தான். அவனை யழைத்துவந்து வளர்த்து வரு கிறேன். இவனுக்குச் சகல கல்விகளையும் கற்பித்திருக்கிறேன்.

பூபதி :—உம். நிரம்ப சந்தோஷம். நான் இன் னும் மூன்று தினங்கள் இக்காட்டிலேயே தங்கி வேட்டையாடப் போகிறேன். இவ் வாலிபன் நற்குணங்களும், நல்ல தேர்ச்சி யும் பெற்றிருப்பதால், நமது அரண்மனை யில் ஒருயர்ந்த உத்தியோகத்தில் இவனை நியமிக்க எனது மந்திரிக்கு ஓர் கடிதம் தரு கிறேன். அதை இவன் நாளைக் காலை

யிலேயே அவரிடம் கொண்டுபோய்க் கொடுக்கவேண்டும். இவன் அரசாங்கத்தில் சிறந்த பதவியடைவானென்று நம்புகிறேன்.

முனிவர் :—நான் செல்வமாக வளர்த்து வந்த இச்சிறுவனை விட்டுப் பிரிய எனக்கு மனமில்லை. என்றாலும், அவனது நலத்தைக் கருதித் தங்களது ஆணையின்படி செய்கிறேன்.

பூபதி :—(ஒரு கடிதத்தை ஜய சந்திரனிடம் கொடுத்து)

இக்கடிதத்தை எச்சரிக்கையாக மந்திரியிடம் கொண்டுபோய்க் கொடு. (ஜய சந்திரன் இருவரிடமும் விடைபெற்றுக்கொண்டு, அரண்மனையை நோக்கி நடந்து செல்லுகிறான்.)

முனிபுங்கவரே !—எனது பரிவாரங்களிருக்குமிடத்திற்கு நான் சென்றுவருகிறேன் ; வந்தனம்.

(போகும்பொழுது தனக்குள்ளே)

இச்சிறுவன் கொலையாளிகளிடமிருந்து எவ்வாறோ தப்பிப் பிழைத்திருக்கிறான். என்றாலும் இவனை விடக்கூடாது. நான் அனுப்பியுள்ள கடிதத்தை மந்திரி பார்த்ததும், விஷத்தைக் கொடுத்து இவனைக் கொன்று விடுவது நிச்சயம். பின்பு இவன் மன்னன் ஆவதைப் பார்ப்போம்.

காட்சி IV

இடம் :—அரண்மனைக் கருகிலுள்ள ஒரு சோலை

காலம் :—நடுப் பகல்

நடிகர்கள் :—ஜய சந்திரன், பூபதியின் புதல்வி விஷை.

ஜய சந்திரன் :—(தனக்குள்ளே) வழி நடந்த களைப்பினால் இந்தச் சோலையில் சிறிது நேரம் படுத்து இளைப்பாறிய பிறகு, கடிதத்தை மந்திரியிடம் சேர்ப்பிக்கலாம்.

(படுத்துத் தூங்கிவிடுகிறான்)

விஷை :—(பூஞ்சோலை மண்டபத்திலிருந்து வெளிவந்து உலாவும் பொழுது, ஜய சந்திரன் படுத்திருப்பதைக் கண்டு அங்குச் செல்லுகிறாள். அவன் கையிலிருந்து நழுவிக் கீழே விழுந்த கடிதத்தைப் பிரித்து வாசிக்கிறாள்.)

மந்திரி மதியூகிக்கு—இக் கடிதம் கொண்டு வரும் குமரன் எனது சத்துரு. ஒன்றும் விசாரியாமல், தாமதமின்றி இவனுக்கு விஷம் கொடுத்து மரிக்கச் செய். பிற நேரில்.

பூபதி.

(சிறிது நேரம் திகைத்து)

ஐயோ பாவம்! அரச இலட்சணங்கள் அனைத்தும் பொருந்திய இவரையா விஷமிட்டுக் கொல்வது? அது தகாது. சரி; இவரை நான் எவ்விதமாவது காப்பாற்றவேண்டும்.

[தன்னுடைய கண்ணில் தீட்டி யிருக்கும் மையை நகத்தினுல் வழித்து எடுத்துக் கரைத்து, அதனுல் அக் கடிதத்தில் "சத்துரு" என்பதை "மித்துரு" என்றும், "விஷம்" என்பதை "விஷையை" என்றும், "மரிக்கச் செய்" என்பதை "மணஞ் செய்வி" என்றும் தெளிவாகத் திருத்தி, முன்னிருந்தபடியே வைத்து விட்டுச் செல்லுகிருள்.]

காட்சி V

இடம் :—அரண்மனே

காலம் :—மறுநாட் காலே

நடிகர்கள் :—ஜய சந்திரன், விஷை, அரசி, மதியூகி, புரோகிதர்கள், சபையோர்.

மதியூகி :—மஹா ராணியாரே! சபையோர்களே! வேட்டைக்குச் சென்றிருக்கும் நமது மன்னர் அனுப்பிய கடிதத்தை வாசிக்கிறேன்; கேளுங்கள்.

மந்திரி மதியூகிக்கு—இக்கடிதம் கொண்டு வரும் குமரன் எனது மித்துரு. ஒன்றும் விசாரியாமல் தாமதமின்றி இவனுக்கு விஷையைக் கொடுத்து மணஞ் செய்வி. பிற நேரில். பூபதி.

அரசனது ஆணைப்படி இந்த நல்ல முகூர்த்தத்தில் நமது இராஜ குமாரி விஷையை இந்தஜயசந்திரனுக்குத்திருமணஞ்செய்து வைப்போம். ஊர்வலம் முதலிய பிற ஆடம்பரங்கள் அரசர் வந்த பிறகு நடைபெறும்.

[வாத்தியங்கள் சப்திக்கின்றன. புரோகிதர்கள் மந்திரஞ் சொல்லுகிறார்கள். மண மகனும் மண மகளும் மாலை மாற்றிக்கொள்ளுகிறார்கள். சிறிது நேரத்திற் கெல்லாம் வேட்டைக்குச் சென்றிருந்த பூபதி மன்னர் வருகிறார்; நிகழ்ந்தவற்றைப் பார்த்து வியப்படைகிறார்; மண மக்கள் மன்னரைப் பணிகிறார்கள். சபை கலைகிறது.]

காட்சி VI

இடம் :—அரண்மனை

காலம் :—மாலை

நடிகர்கள் :—பூபதி, மதியூகி, ஜய சந்திரன், விஷை, அரசி, சபையோர்கள்.

பூபதி :—மந்திரி! என்ன காரியம் செய்தாய்? 'விஷத்தைக் கொடுத்து மரிக்கச் செய்' என்று நான் எழுதியிருக்க, இவர்களுக்கு எவ்விதம் மணம் புரிவித்தாய்?

மதியூகி :—மஹா ராஜாவே! தங்களது கடிதம் இதோ இருக்கிறது பாருங்கள். அதில் 'விஷையைக் கொடுத்து மணஞ்செய்வி' என்று தெளிவாக எழுதியிருக்கிறபடி, நல்ல தினத்தில் தங்கள் உத்தரவை நிறைவேற்றினேனே ஒழிய வேறில்லை.

பூபதி:—எல்லாம் தெய்வச் செயல். நாம் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைத்தது. முனிவரது வார்த்தை உண்மையாயிற்று. மிகச் சந்தோஷம்! அரசாளப் பிறந்த ஜய சந்திரனுக்கு இப்பொழுதே இள வரசுப் பட்டமும் கட்டிவிடுவோம். சபை கூடட்டும்.

(அரண்மனையிலுள்ள சகலரும் வருகிறார்கள். வாத்தியங்கள் தொனிக்கின்றன. ஜய சந்திரனும், விஷையும் சிம்மாசனத்தில் உட்காருகிறார்கள்.)

ஜய சந்திரன், விஷை :—(பாடுகிறார்கள்)

நாதவிந்துகலாதி நமோ நம
வேத மந்த்ர சொரூபா நமோ நம
ஞான பண்டித சுவாமி நமோ நம—
வெகு கோடி

நாம சம்பு குமாரா நமோ நம
போக அந்தரி பாலா நமோ நம
நாக பந்த மயூரா நமோ நம—பரசூரா

சேத தண்ட விநோதா நமோ நம
கீத கிண்கிணி பாதா நமோ நம
தீர ஸம்பிரம வீரா நமோ நம—கிரி ராஜா

தீப மங்கள ஜோதி நமோ நம
தூய அம்பல லீலா நமோ நம
தேவ குஞ்சரி பாகா நமோ நம—
அருள் தாராய்.

———

உ

ஔவையார் அருளிச் செய்த

மூதுரை என்னும்

வாக்குண்டாம்

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது—
[பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கை யான்பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு.

நன்றி ஒருவர்க்குச் செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கொல் எனவேண்டா—நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான் தருத லால். 1

நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்
கல்மேல் எழுத்துப்போற் காணுமே—அல்லாத
ஈரமில்லா நெஞ்சத்தார்க் கீந்த உபகாரம்
நீர்மேல் எழுத்திற்கு நேர். 2

அட்டாலும் பால்சுவையிற் குன்று தளவளாய்
நட்டாலும் நண்பல்லார்—நண்பல்லர்
கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே சங்கு
சுட்டாலும் வெண்மை தரும். 3

அடுத்து முயன்றாலும் ஆகுநாள் அன்றி
எடுத்த கருமங்கள் ஆகா—தொடுத்த
உருவத்தால் நீண்ட உயர்மரங்கள் எல்லாம்
பருவத்தால் அன்றிப் பழா. 4

உற்ற விடத்தில் உயிர்வழங்குந் தன்மையோர்
பற்றலரைக் கண்டாற் பணிவரோ—கற்றூண்
பிளந்திறுவ தல்லாற் பெரும்பாரம் தாங்கின்
தளர்ந்து வளையுமோ தான். 5

நீரளவே யாகுமாம் நீராம்பல் தான்கற்ற
நூலளவே யாகுமாம் நுண்ணறிவு—மேலைத்
தவத்தளவே யாகுமாந் தான்பெற்ற செல்வங்
குலத்தளவே யாகுங் குணம். 6

நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார் சொற் கேட்பதுவும் நன்றே—நல்லார்
குணங்க ளுரைப்பதுவும் நன்றே யவரோ
டிணங்கி யிருப்பதுவும் நன்று. 7

தீயாரைக் காண்பதுவுந் தீதே திருவற்ற
தீயார்சொற் கேட்பதுவுந் தீதே—தீயார்
குணங்க ளுரைப்பதுவுந் தீதே யவரோ
டிணங்கி யிருப்பதுவுந் தீது. 8

நெல்லுக் கிறைத்த நீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம்—தொல்லுல
நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு [கில்
எல்லார்க்கும் பெய்யு மழை. 9

பண்டு முளைப்பது அரிசியே யானாலும்
விண்டுமி போனால் முளையாதாம்—கொண்டபேர்
ஆற்ற லுடையார்க்கும் ஆகா தளவின்றி
ஏற்ற கருமம் செயல். 10

மடல்பெரிது தாழை மகிழினிது கந்தம் [து
உடல்சிறிய ரென்றிருக்கவேண்டா—கடல்பெரி
மண்ணீரும் ஆகா ததனருகே சிற்றூறல்
உண்ணீரு மாகி விடும். 11

கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள்—சபைநடுவே
நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
மாட்டா தவன் நன் மரம். 12

கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி
தானும் அதுவாகப் பாவித்துத்—தானும் தன்
பொல்லாச் சிறகை விரித் தாடினாற் போலுமே
கல்லாதான் கற்ற கவி. 13

வேங்கை வரிப்புலிநோய் தீர்த்த விடகாரி
ஆங்கதனுக் காகாரம் ஆனாற்போல்—பாங்கறி
புல்லறி வாளர்க்குச் செய்த வுபகாரம் [யாப்
கல்லின்மேே லிட்ட கலம். 14

அற்ற குளத்தின் அறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வார் உறவல்லர்—அக்குளத்தில்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி யுறுவார் உறவு. 15

சீரியர் கெட்டாலும் சீரியரே, சீரியர் மற்(று)
அல்லாதார் கெட்டாலங் கென்னகும்—சீரிய
பொன்னின் குடமுடைந்தாற் பொன்னகும் என்
மண்ணின் குடமுடைந்தக் கால். [னகும் 16

ஆழ வமுக்கி முகக்கினும் ஆழ்கடல்நீர்
நாழி முகவாது நானழி—தோழி
நிதியுங் கணவனும் நேர்படினுந் தந்தம்
விதியின் பயனே பயன். 17

உடன் பிறந்தார் சுற்றத்தார் என்றிருக்க வேண்
உடன் பிறந்தே கொல்லும்வியாதி—உடன் [டா
மாமலையிலுள்ள மருந்தே பிணி தீர்க்கும்[பிறவா
அம்மருந்து போல்வாருமுண்டு. 18

கற்பிளவோ டொப்பர் கயவர் கடுஞ்சினத்துப்
பொற்பிளவோ டொப்பாரும் போல்வாரே--விற்
நீர்கிழிய வெய்த வடுப்போல மாறுமே[பிடித்து
சீரொழுகு சான்ருேர் சினம். 19

நற்ருமரைக் கயத்தில் நல்லன்னஞ் சேர்ந்தாற்
கற்ருரைக்கற்ருரே காமுறுவர்—கற்பிலா[போற்
மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் முதுகாட்டிற்
காக்கை யுகக்கும் பிணம். 20

நஞ்சுடைமை தானறிந்து நாகம் கரந்துறையும்
அஞ்சாப் புறங்கிடக்கும் நீர்ப்பாம்பு—நெஞ்சிற்
கரவுடையார் தம்மைக் கரப்பர் கரவார்
கரவிலா நெஞ்சத் தவர். 21

மன்னனும் மாசறக்கற்றேனும் சீர்தூக்கின் [குத்
மன்னனிற் கற்றேன் சிறப்புடையன்—மன்னற்
தன்தேசம் அல்லால் சிறப்பில்லை கற்றோர்க்குச்
சென்ற விடமெல்லாம் சிறப்பு. 22

சந்தன மென்குறடு தான்தேய்ந்த காலத்தும்
கந்தம் குறைபடா (து) ஆதலால்—தம்தம்
தனம் சிறியர் ஆயினும் தார்வேந்தர் கேட்டால்
மனம் சிறியர் ஆவரோ மற்று. 23

சாந்தனையும் தீயனவே செய்திடினும் தாமவரை
ஆந்தனையும் காப்பர் அறிவுடையோர்—மாந்தர்
குறைக்கும் தனையும் குளிர் நிழலைத் தந்து
மறைக்குமாம் கண்டீர் மரம். 24

விவேக சிந்தாமணி

பொருளில்லார்க் கின்பமில்லை ; புண்ணியம் இல்லை ;என்றும்
மருவிய கீர்த்தி இல்லை ; மைந்தரிற் பெருமை இல்லை ;
கருதிய கருமம் இல்லை ; கதிபெற வழியும் இல்லை ;
பெருநிலந் தனிற் சஞ்சாரப் பிரேதமாய்த் திரிகுவாரே. 1

மெய்யதைச் சொல்வராகில், விளங்கிடு மேலும் நன்மை ;
வையகம் அவரைக் கொள்வர் ; மனிதரில் தேவராவர்.
பொய்யதைச் சொல்வராகில், போசனம் அற்ப மாகும் ;
நொய்யவ ரிவர்கள் என்று நோக்கிடார் அறிவுள்ளோரே. 2

புத்திமான் பலவான் ஆவான் ; பலமுளான் புத்தியற்றால்
எத்தனை விதத்தினாலும் இடரது வந்தே தீரும் ;
மற்றொரு சிங்கந்தன்னை வனமுயல் கூட்டிச் சென்றே
உற்றதோர் கிணற்றில் சாயல் காட்டிய உவமை போலாம். 3

வானர மழை தனில் நனையத் தூக்கணம்
தானொரு நெறி சொலத் தாண்டிப் பிய்த்திடும்
ஞானமும், கல்வியும், நவின்ற நூல்களும்
ஈனருக்(கு)உரைத்திடில் இடரதாகுமே. 4

ஆசாரஞ் செய்வ ராகில் அறிவொடு புகழும் உண்டாம்.
ஆசாரம் நன்மை யானால் அவனியில் தேவர் ஆவர்.
ஆசாரம் செய்யா ராகில், அறிவொடு புகழும் அற்றுப்
பேசார் போற் பேச்சுமாகிப் பிணியொடு நரகில் வீழ்வார். 5

ஒப்புடன் முக மலர்ந்தே உபசரித் துண்மை பேசி
உப்பிலாக் கூழிட்டாலும் உண்பதே அமுதமாகும்.
முப்பழமொடு பால் அன்னம் முகங் கடுத்திடுவாராகில்
கப்பிய பசியினோடு கடும் பசியாகும் தானே.

தனிப் பாடல்கள்

1. தண்டலையார் சதகம்

நன்றி தரும் பிள்ளை யொன்று பெற்றாலும்,
குல முழுதும் நன்மை உண்டாம்;
அன்றி யறிவில்லாத பிள்ளை யொரு
நூறு பெற்றும் ஆவது உண்டோ?
மன்றில் நடம் புரிவாரே! தண்டலையாரே!
சொன்னேன் வருடந்தோறும்
பன்றி பல ஈன்று மென்ன? குஞ்சரமொன்று
ஈன்றதனாற் பயனுண்டாமே.

2. குடையின் உபயோகம்

பகலோன் தெறும் கிரணம், பாய் பறவை எச்சம்
மிகமேல் உறுதகற்றும், விண்ணின்—முகிலதனால்
பெய்யும் மழை தடுக்கும்; பேரழகுமாம், ஒருவர்
கையில் குடையிருந்தக்கால்.

3. பழக்கம்

சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்—நித்தம்
நடையும் நடைப்பழக்கம் நட்புந் தயையும்
கொடையும் பிறவிக் குணம்.

4. கல்வி

கற்றது கைம் மண்ணளவு கல்லா துலகளவென்று
உற்ற கலைமடந்தை ஓதுகிறாள்—மெத்த
வெறும் பந்தயங் கூறவேண்டாம் புலவீர்!
எறும்புந் தன்கையால் எண்சாண்.

Printed at The Royal Printing Works, Mount Road, Madras.